சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஸ்ரீ ஆவணி மீ 26 ஆம் உ (1889)
Web: w.w.w hindu organ. com

பிரதி விலை ரூபா: 50.00
செய்தித் தாளகப் பதிவு பெற்றது.
email: editor @ hindu organ. com

# இந்து சாதனம்
(HINDU ORGAN)

புத்தகம்: 120
சர்வதாரி வருடம் தைத்திங்கள் 1 ஆம் நாள்
(14.01.2009)
இதழ்: 01

# ஆலய வழிபாடு

கலாநிதி சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள்

**கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்; ஆலயந் தொழுவது சாலவும் நன்று - போன்ற நல்லுரைகள் மூலம் ஆலய வழிபாட்டின் அவசியத்தை ஆன்றோர்கள் வலியுறுத்தி யுள்ளனர். ஆலய வழிபாட்டின் முக்கியமான அம்சங்கள், இறைவனுக்குத் திருமணம் செய்துவைப்பதன் நோக்கம், ஆன்மீக முன்னேற்றம் முதலான பல விஷயங்களை விளக்குகின்றார், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்தைச் சேர்ந்தவரும், மூதறிஞரும் மெய்யியல் கலாநிதியுமான சிவத்திரு க.வைத்தீசுவரக் குருக்கள்.**

இவ்வுலகில் உயிர்கள் மாயாகாரியமான உடல் களோடிருந்து. உலக இன்ப துன்பங்களைப் பெற்று வாழ்கின்றன. இந்த வாழ்வு இகலோக வாழ்வு எனப்படும். இவ்வாழ்வு தற்காலிகமானது நிலையா இயல்போடு கூடி



**விநாயகி**

பன்னிரண்டாம் பக்கம் பார்க்க

யது; இன்ப, துன்ப மயக்கநிலை வேறுபாடுகளுக்கு இட மானது; சனன மரணத் தொடர்ச்சிகளால் நிறைந்திருப் பது; சுவர்க்க நரக அநுபவங்கட்குமுரியது.

இந்த உடலிற் பொருந்தாமலும் இங்குள்ள இன்ப துன்ப மயக்கங்கட்கு ஆட்படாமலும் வாழும் வாழ்வும் ஒன்று உயிருக்குண்டு. அது பரலோக வாழ்வு என்று கூறப்படும். அது நிரந்தரமானது: போக்கு வரவு, மாற்றம் மலைவு முதலியன இல்லாதது: பிறப்பு, இறப்பு நிலைகளைக் கடந்தது. சிவனைச் சார்ந்து சிவமயமாய் அமைந்து சிவானந்த உணர்வில் திளைப்பது. வாழ்வில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வோருயிருக்கும் முடிவான இலட்சிய மாயிருப்பது அப்பர வாழ்வேயாகும். அப்பர வாழ்வைப் பெறுதற்கான தகுதிப்பாட்டை உயிர்கள் இகவாழ்வி லேயே பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அதிலும் பிரதானமாக மனிதப் பிறவி வாய்த்திருக்கும்போதே பெற் றுக் கொள்ளவேண்டும் என்பது நெடுங்காலமாக உணரப் பட்டு வருகிறது. இத்தகுதிப்பாட்டை மனித உயிர்களி டத்தில் வருவிக்கு முகமாகவே உலகில் சமயங்களும் சமய சாதனைகளும் அமைந்துள்ளனவாகும்.

நமது சைவசமயம் ஆலய வழிபாட்டை இதற்கேற்ற பொருத்தமான சாதனமாக வகுத்திருக்கின்றது. பரலோக வாழ்வாகிய பேற்றை அடைவதற்கு ஓர் உயிர் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற படிநிலைகளில் முறையே தேறித் தேறி மேலேறிப் போதல் வேண்டும் என்ற சைவசித்தாந்தக் கருத்துக்கு முற்றிலும் அநு சரணையாக இருப்பது இந்த ஆலய வழிபாடேயாம்.

# ஆலய வழிபாடு

ஆலய வழிபாட்டுக்கு வகுக்கப்பட்டிருக்கும் நியமங்கள். அங்கே செய்யலாம் என விதிக்கப்பட்டிருக்குஞ் செயல்கள், அங்குள்ள மூர்த்திகளின் இலட்சணங்கள், அங்கே நடக்கும் நித்திய நைமித்தியக் கிரியைகளின் நோக்கங்கள், அங்கு நடைபெறும் உற்சவங்களின் தத்துவக் கருத்துக்கள், ஆலய மண்டப அமைப்பு முறைகள் முதலியனவற்றை நன்கு விசாரித்து அவற்றின் விளக்கங்களை அறியும்போது ஒருவர் மேற்கூறிய சரியை முதலிய நான்கு நிலைகளிலும், அவற்றின் உட்பிரிவு களாயுள்ள பல்வேறு துறைகளிலும் பொருந்திப் பொருந்தி முன்னேறுவதற்கான பெருவாய்ப்புக்குப் போதிய இட மிருத்தல் நன்கு புலனாகும். அவற்றுள் சரியை, கிரியை என்னும் இரண்டு படிநிலைகளும் மிகத் தூலமாகவும், யோகம், ஞானம் என்னும் இரண்டும் அவற்றுள் மறை பொருள்களாகவும் அமைந்திருக்கும் நுட்பம் விவேகித்து உணரத்தக்கதாகும். ஆலயக் கிரியைகளுக்கு உரிய வராயிருக்கும் சிவாசாரியர் புரிதற்குரிய கடமைகள் புறத் தோற்றமளவிற் கிரியைகளாயிருக்கும். ஆனால், அவர் முற்று முழுதாக யோகஞான அநுபவ நிலைகளைத் தமது அகத்தினால் உணர்ந்து அவற்றில் ஒன்றி நின்று கொண்டு, தமது புறக் கிரியைகளைச் செய்யாதவிடத்து அக்கிரியைகள் பலன் படுங் கிரியைகள் ஆகமாட்டா. அவர் புரிதற்குரிய கிரியைகளின் தத்துவார்த்தங்களை, அவற்றை விரித்துரைக்கும் ஆகம விளக்கின் உதவியினாலே காண்பவர்க்கு இவ் வுண்மை தெற்றெனப் புலப்படும்.

கிரியையை ஆரம்பிக்கும் முன்னமே சிவாசாரியர் தம் மைச் சகல விதத்திலும் மனித நிலையிலிருந்து விடு வித்துச் சிவநிலைக்கு மாற்றிக் கொள்கிறார். அவர் புரி யும் ஆன்மார்த்தபூசை அந்தர்யாகம், பூதசுத்தி, சகளீ கரணம் முதலான காரியங்கள் அனைத்தும் அவர் தம்மைச் சிவமாகவே மாற்றிக் கொண்டுவிட்டமைக்கு அத் தாட்சியாகும். அந்நிலையில் தாம் சிவமே என்ற பாவனை மூலம் சிவனோடு ஒன்றி நின்று செய்யும் பிரணாயாமம், ஆவாகனம் முதலாகிய கிரியைகள் அவருடைய யோகப்பயிற்சிக்கு அத்தாட்சியாகும். எந்தக் கிரியையும் அதன் உண்மையான தாற்பரியத்தை விளங்கிச் செய்தா லல்லாது பயன் படுவதில்லை என்பர் அறிஞர். தாம் சிவமேயாய் நின்று கொண்டே ஒரு சிவாசாரியர் கிரியை களைச் செய்ய வேண்டும் என்பதன் தாற்பரியம் யாது?

அவனன்றி ஓரணுவும் அசையாது. எவ்வுயிரின் எச்செயலும் சிவனாலேயே செய்விக்கப்படுகிறது. அவரே செய்தும் செய்வித்தும் நிற்கிறார். ஆனால், சாமானியமாக எந்த உயிருக்கும் அந்த உணர்வு நேர்படுவது இல்லை. எந்த ஒரு செயலில் தலைப்படும்போதும் அது தன் செயல் என்ற நினைப்பும், அதன் சார்பான சகல அடைவு களுக்கும் தானே உத்தரவாதி என்ற முனைப்பும், ஒவ் வோருயிருக்கும் சர்வ சாமானியமானவை. ஆணவச் சார்பான இத்தகைய நினைப்பும் முனைப்பும் வினை யாய்ப் பெருகி மேலும் மேலும் உயிரை உலக இன்னல் களில் ஆழ்த்தி விடுதல் சைவசித்தாந்த ஞான அநுபவ உண்மையாகும். வழிபாட்டு விஷயத்திலும் இந்நிலை இடம்பெறின் வழிபாடு கருதிய பலன் கிட்டாது என்பதில் ஆட்சேபமில்லை. ஆதலின், நான் என்ற நினைப்பு முனைப்பு நிலைகளுக்கு அப்பாற்பட்டு நின்று, தம் கடமையைச் செய்ய வேண்டிய சிவாசாரியர் "செயல் எனதன்று: செயலின் பெறுபேறும் எனக்கன்று: என்மூலம் எல்லாஞ் செய்பவனும் சிவனே; அவற்றின் பெறுபேற்றுக் குரியவனுஞ் சிவனே" என்ற பூரண விளக்க நிலையில் நின்றே செய்தல் வேண்டும். இந்த விளக்க நிலைக்குப் பெயர் ஞானம். "சிவோ தாதா சிவோ போக்தா சிவஸ் ஸர்வம் இகம் ஜகத் சிவோயஜதி சர்வத்ர சிவோஹம் ஏவ து" என்ற ஆகம மந்திரம் மூலம் இவ்வுண்மை பிரசித்தமாகின்றது.

ஆலயத்தில் நிகழும் கிரியைகள், யோகஞானப் பேற்றுக்கு உரியவையாம். இவற்றுக்கு முன்னும் பின் னும் இடம்பெறும் கிரியைகளல்லாத மற்றுங் கோயிற் பணிகள் அனைத்துஞ் சரியைகளாம். ஸ்நானம், சந்தியா வந்தனம், பிரதட்சணம், நமஸ்காரம், திருவலகிடல், திருமெழுக்கிடல் முதலாகிய யாவும் இச்சரியையில் அடங்கும். இச்சரியைகளும் சிறப்பாக ஆலயக்கிரியை களுக்கு அங்கமாகவே அமைந்தவை என்ற விளக்கம் இன்றியமையாதது.

ஆலயங்கள் மக்களுக்காகவே அமைந்தவை. மக் களினத்தில் ஒவ்வொருவரும் ஆலய வழிபாட்டினால் முன்னேற வேண்டியவர் ஆவர். அவர் பெறும் முன்னேற் றம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற படிமுறை வழியினதாகவே நிகழ வேண்டும். அந்நிலைக்கு அவர் களிடத்தில் ஆகவேண்டிய முன்னேற்றக் குறிகளை விருத்தியாக்குவதற்குரியவர் சிவாசாரியர் ஆவர். ஆலய வழிபாடு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு கிரியையிலும் வைத்து இவ்வுண்மையை நன்குபுரிந்து கொள்ளலாம்.

ஆலய வழிபாட்டில் மிகச் சர்வசாதாரணமான ஒரு கிரியை அர்ச்சனையாகும். வழிபடச்செல்லும் பக்த னொருவன் வெறுங்கையுடன் செல்லாது, பழம் பாக்கு, வெற்றிலை. தேங்காய் என்பவற்றுடன் தனது தகுதிக் கேற்றவாறு செம்புக்காசோ, பொன்னோ கொண்டு செல் லல் வேண்டும். அவற்றைச் சுவாமிக்கு அர்ப்பணிக்க வேண்டும். பின்னர் பிரசாதம் பெற்று மீளவேண்டும் என்ற ஒழுங்கு உண்டு. இதன் தாற்பரியம் யாது? குறித்த பக்தன் தன்னை முற்றாகச் சுவாமிக்கு அர்ப்பணித்தலே இதன் தாற்பரியமாகும். கனிந்த வாழைப்பழம் அவனது பண்பட்ட உள்ளத்தைக் குறிக்கிறது. வெற்றிலையும் பாக்கும் அவனைச் சுருட்டி மயக்கும் சுகபோக இச்சை களைக் குறிக்கின்றன. தேங்காய் முழுமையாயிருக்கும் போது அவன மலத்திணிவில் மூடுண்டிருக்கும் நிலையைக் குறிக்கின்றது. பணம் அவன் தன்னுடைமையாக வைத்துக்

# ஆலய வழிபாடு

கொண்டிருப்பவற்றைக் குறிக்கின்றது. கோயிற் கிரியை சம்பந்தப்பட்ட மட்டில் இ..்து எவ்வாறு பிரயோகமாகின் றது என்று பார்ப்போம்.

கோயிலில் சிவாசாரியர் முதலில் அப்பொருள் களைப் பக்தனிடமிருந்து ஏற்கின்றார் பழம், பாக்கு, வெற்றிலைகளைச் சுவாமியின் முன்னர் வைத்து, அவன் மனப்பக்குவத்தையும், அவன் தன் உலகபோக இச்சை களை அங்கு அர்ப்பணித்து விட்டமையையும் சுவாமிக்கு அறிவித்தலோடு, தேங்காயை உடைத்து அதன்மூலம் அவனது மலத்திணிப்பு நீங்கி உள்ளேகாணும் வெண் பருப்புப் போல அவன் சுத்த ஆன்மாவாகிறான் என்பதை யும் தெரிவித்து, "இனி அவனுடைமையெல்லாம் உன்னு டைமையாகவே அர்ப்பணிக்கப்பட்டுவிட்டன. சுவாமீ! அவனை ஆட்கொள்ளல் வேண்டும்" என்று பிரார்த்தித்துக் கொள்கின்றார். தம்முடைய பிரார்த்தனைக்குச் சுவாமி செவிசாய்க்கச் செய்யும் பொருட்டாகவே சுவாமியின் நாமங்களை உருக்கமாக ஓதியோதி மலர் தூவுகின்றார். முடிவில் கற்பூர ஒளியில் அவனைத் தரிசிக்க வைத்து, அவனுக்கு ஒரு மன நிறைவை ஏற்படுத்துகின்றார்.

அதன்மேல் அர்ச்சனைப் பொருள்களையும், வீபூதி, தீர்த்தம் ஆகியவற்றையும் எடுத்து வந்து பக்தனிடம் கொடுக்கிறார். சுவாமி உன் அர்ப்பணித்தலை ஏற்றுக் கொண்டு உனக்குத் தமது கருணையைப் பாலித்திருக் கின்றார் என்று தெரிவிப்பதே இச்செயலின் கருத்தாகும். திரும்பவும் அவன் கையிற் கொடுக்கப்பட்டவை பார் வைக்குப் பழம் முதலியனவாகத் தோன்றினாலும், உண்மையில் அவை குறிப்பது சுவாமியின் கருணை யையேதான். அவற்றைப் பிரசாதம் என்ற பெயரால் வழங்குவதே இதற்குப் போதிய அத்தாட்சியாகும். வேறெந்தப் பொருளுக்காவது பிரசாதம் என்றபெய ரில்லை. சுவாமியின் கருணைக்கு மாத்திரம் பிரசாதம் என்ற பெயருண்டு. இனி அப்பிரசாதம் கொடுத்தற்கு நிய மிக்கப்பட்ட இடத்தைக் கவனித்தால் அர்ச்சனைப் பேறு ஆத்மிகத் துய்மையாகிய ஞானப்பேறுதான் என்பது எளிதில் விளங்கும். ஆலயத்தில் தம்ப மண்டபத்தில் இருக்கும் நந்தி எந்நேரமுஞ் சிவனையே ஒரேநோக்காக நோக்கி நிற்கும் பரிசுத்தமான ஆன்மாவின் அறிகுறியாயுள் ளது. அதன் முன்னிலையில் வைத்தே சிவாசாரியர் பக்தனுக்குப் பிரசாதம் வழங்குவது அநுபவமுறை யாகும். இந்த நந்தியைப்போல நீயும் பரிசுத்தனாயினாய் என்பது அதன் குறிப்பாகும்.

சாதாரண கிரியைகளில் ஒன்று என்ற தோரணை யில் அர்ச்சனையைப் பற்றிக் கவனித்தோம். இனி, பெருங் கிரியைகளிலும் ஒன்றைக் கவனிப்போம் ஆலயங்களில் நிகழும் பிரதான கிரியைகளில் ஒன்று திருக்கலியாணம். சுவாமிக்குமா கலியாணம் என்ற விநோதப் பார்வையில் இது வேடிக்கையாய்த் தெரியுமே தவிர. ஆன்மஞான நோக்கில் இக்கிரியை தன் பண்பாலும் பயனாலும் மிகுந்த மேம்பாடுடைய தாய், முக்கியமான ஒரு யோக உண்மையின் அடிப்படையில் ஞானப்பேற்றுக்குச் சாதன மாய் இருத்தல் இனிது புலப்படும்.

உலக இயக்கம் முழுவதிலும் ஆண்சக்தி, பெண் சக்தி என்ற இரண்டின் தொழிற்பாடு இருத்தலை அணு ஆராய்ச்சியில் வைத்து விஞ்ஞானம் விளம்பரப்படுத்தி விட்டது. "எலெக்ட்ரன்" ஆண் எனவும், "நியூட்ரன்" பெண் எனவும் கொள்ளப்படுகிறது. அண்டப்படைப்பியக்கங் களிலும் பிண்ட (உடல்) உறுப்பியக்கங்களிலும் இதனை ஏகப்பட்ட உண்மையாக ஒத்துக்கொண்டுவிட்டார்கள். இத்தொடர்பில், விஞ்ஞானிகளின் காட்சிக்கு அகப்படாத மற்றொரு ஆண், பெண் சக்திகளின் தொழிற்பாட்டைத் தெய்வீக ஞான ஆராய்ச்சிச் சபையார் தமது ஞான திருஷ்டி ஆராய்ச்சியிற் கண்டு கூறியிருக்கின்றார்கள். அணுபாகங்களாய் உள்ளவை ஆண்சக்தி பெண்சக்தி யுள்ளனவாயினும் அவை சடங்கள். தாமாகவே இயங்குஞ் சீவசக்தியுடையனவல்ல. ஆதலால், அவற்றைத் தொழிற் படுத்தி ஆட்டிப்படைக்கும் செந்நிறமான ஒரு சக்தியும், நீல (மங்கல) நிறமான ஒரு சக்தியும் அவற்றுக்கு வேறா யிருக்கும் இரகசியம், அவர்கள் காட்சியில் வெளியாகி யுள்ளது. அவற்றின் இயக்கத்தினாலேயே அனைத்தும் இயங்குவதாக அவர்கள் கண்டிருக்கிறார்கள். ஒளியியக் கத்திற்கூட இந்த ஒழுங்கு காணப்படுதல், ஒளிக்கதிர்ச் சிதறலில் வைத்து அவதானிக்கப்பட்டதாகவும் சொல் கிறார்கள். ஒரு ஒளிக்கதிர் சிதற வைக்கப்படும் போது இடையிடையே கருமை ஒளியும் இருப்பதாகச் சொல் கிறார்கள். இவ்வாற்றால் செந்நிறச் சக்தியாகிய சிவமும், நீல (மங்கல்) நிறச்சக்தியாகிய அம்மையும் கூடும் கூட்டத் தினால் அனைத்தும் ஆகின்றன. அனைத்தும் இயங்கு கின்றன என்ற உண்மை உறுதியாகின்றது. ஆலயங் களிலே விசேஷமாகக் கும்பாபிஷேகம் முடிந்தவுடன் திருக்கலியாணம் நடத்துகிறார்கள். கும்பாபிஷேகமாவதன் மூலம் சுவாமி சாந்நித்திய பட்டதும் சிவத்தைச் சக்தி யோடு சேர்த்தலினால் உடனடியாகச் சிருஷ்டி ஆரம்ப மாகின்றது என்பது அதன் தாற்பரியம்.

ஆலயக் கிரியைகளின் நோக்கம் மிகமிக உயர்ந் தது. இருந்தும் காலத்திற்கேற்ற கோலமாக இம்மைக் குரிய சுகம் செல்வ, போகப்பேறுகள்தாம் ஆலய வழி பாட்டின் நோக்கமும் ஆலயக்கிரியை களின் பலாபலனும் என்றெண்ணும் போக்கு இக்காலத்தில் மிகுந்து வருவதும் ஏதோ உண்மைதான். இந்தநிலை மிகத் தவறானது. இலௌகீக முன்னேற்றம் ஆலயக் கிரியை வழிபாடுகளின் இலக்கன்று. ஆன்ம முன்னேற்றமே அவற்றின் இலக் காகும். அந்த ஆன்ம முன்னேற்றத்திற்கு அநுசரணை யாக அதன் அடிப்படையில் மற்றும் பேறுகளும் அதி கரித்து வரலாம். வந்தாற் கண்டுகொள்வதே தவிர, வராவிட்டாற் குறைப்பட்டுக் கொள்வதோ, அவற் றுக்காகவே வழிபாட்டு முயற்சியை வீண்விரயமாக்கு வதோ சமயப் பண்பாகாது. ❊

# அனுபவம் – அற்புதம் – ஆனந்தம்

**இறைவனின் அருட்கொடையாகத் தமக்குக் கிடைத்த சிறப்பாற்றல்களை ஏனைய அடியார்களின் துயர் தீர்க்கப் பயன்படுத்தும் சித்தர்கள் பலரைச் சைவ உலகம் நன்கறியும்.**

**சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் அவர்களுக்குத் திடீரென்று ஏற்பட்ட மிக மோசமான ஓர் இழப்பிலிருந்து அவரைக் காப்பாற்றியவர் யாழ்ப்பாணத்துச் சித்தபுருஷர் யோகர் சுவாமிகள்.**

**'வித்தின்றி நாறு செய்வான்' என்ற தலைப்பிலே பேராசிரியரால் எழுதப்பட்டு யாழ்ப்பாணம் சிவதொண்டன் சபையால் வெளியிடப்பட்ட 'யோகசுவாமிகள் வாழ்க்கையும் வழிகாட்டுதலும்' என்னும் நூலில் இடம்பெற்ற கட்டுரையின் ஒரு பகுதியைச் சுருக்கித் தருகின்றோம்.**

**இறை நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தக் கூடிய இத்தகைய உண்மைச் சம்பவங்கள் அவ்வப்போது 'இந்து சாதனம்' இதழில் இடம்பெறும்.**

யாழ்ப்பாணம் வடமராட்சி, கரணவாய் தெற்கிலுள்ள ஆலயமொன்றிலே பத்து நாள் தொடர் சொற்பொழிவு நிகழ்த்த ஒப்புக்கொண்டு 1955 ஆம் ஆண்டளவில் வந்திருந்தார் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன்.

மலாய் நாட்டு ஓய்வூதியர் திரு. முருகப்பு என்பவரின் வீட்டிலே தங்கியிருந்தார். எங்கு விரும்பினாலும் செல்வதற்கு வசதியாக, பேராசிரியருக்கு ஒரு காரையும் கொடுத்திருந்தார் திரு. முருகப்பு.

முதல் நாட் சொற்பொழிவு சிறப்பாக நடைபெற்றது.

யாழ்ப்பாணத்துக்கு வருகின்ற வேளைகளிலே கொழும்புத்துறை யோகர்சுவாமிகளிடம் சென்று வணங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்த பேராசிரியர். முதல் நாட் சொற்பொழிவு முடிவுற்றபின், கொழும் புத்துறைக்குச் சென்றார்; யோகர் சுவாமிகளை வழிபட்டு விட்டு மீண்டும் கரணவாய்க்குத் திரும்பினார்.

மறுநாட் பொழுது விடிந்தது.

பல் தேய்த்துக்கொண்டு நின்றார் பேராசிரியர்.

வழமைபோல்,

"நன்றாகத் தூங்கினீர்களா, ஐயா?" என்று கேட்டார் முருகப்பு. பதில் சொல்ல முயன்றார் பேராசிரியர்.

ஆனால் வாயிலிருந்து காற்றுத்தான் வெளிவந்தது; ஒரு சொல்லும் வெளி வரவில்லை.

அதிர்ந்து போனார் அவர்.

காது, மூக்கு, தொண்டை வைத்தியநிபுணர் (ENT specialist) ஒருவரின் நினைவு பேராசிரியருக்கு வந்தது. பதவியிலிருந்து ஓய்வுபெற்ற அவர் சாவகச்சேரியில் வசித்து வந்தார்.

தானே காரைச் செலுத்திக் கொண்டு அவரிடம் சென்றார் பேராசிரியர்.

நிபுணர் கவனமாகச் சோதனை செய்தார்.

பேராசிரியர் ஏற்கெனவே சந்தேகப்பட்டதை - ஒலி நரம்பு முற்றாகச் செயலிழந்து விட்டதை நிபுணர் உறுதிப்படுத்தினார்.

உரிய சிகிச்சைக்காக அன்று மாலையே கொழும்பிற்குச் செல்வதற்குத் தயாராக வருமாறும் கூறினார்.

கண்ணீரைக் கட்டுப்படுத்தப் பேராசிரியரால் முடியவில்லை.

மாணவர்களுக்கு விரிவுரை நிகழ்த்துவது அவருடைய நாளாந்தக் கடமை; அத்துடன் தொடர் சொற்பொழிவாளராகவுமிருந்தார்.

வாயாற் பேச முடியாவிட்டால் அவருடைய எதிர்காலம்? அவருடைய குடும்பத்தின் நிலை?

கவலை மனத்தை அரிக்கக் காரில் ஏறிச் சாவியைப் போட்டார்.

காரடிக்கு ஓடி வந்த அந்த வைத்தியநிபுணர் "ஞானசம்பந்தன் ஐயா! நீங்கள் யோகர் சுவாமியின் சீடர்தானே! அவரைப் போய்ப் பாருங்களேன்" என்றார்.

பகலிலே யாரும் யோகர் சுவாமிகளிடம் செல்வதில்லை.

மாலை ஆறு மணிக்குப் பின்னர்தான் செல்வார்கள்.

பேராசிரியர் ஞானசம்பந்தனுக்கு இது நன்றாகத் தெரியும்.

எனினும், சிறிது நேரம் யோசித்துவிட்டு, உடனேயே யோகர் சுவாமியைத் தரிசிப்பதற்குப் புறப்பட்டு விட்டார்.

கொழும்புத்துறையில், யோகர் சுவாமிகளின் ஆச்சிரமத்துக்கு அண்மையிலே காரை நிறுத்திவிட்டு, எதிரேயிருந்த கேணியில் கை, கால்களைச் சுத்தம் செய்து விட்டு, மகானின் குடிசைக்குள் நுழைந்தார்.

அடக்க முடியாத அழுகையுடனும் கண்ணீருடனும் அந்த மகானை விழுந்து வணங்கிய பேராசிரியர் அவ்விடத்தை விட்டு எழும்பவே விரும்பவில்லை.

ஓரிரு நிமிடங்கள் கழிந்தன.

"ஏனடா பொடியா! அந்த மருத்துவர் என்ன முருகன் என்ற நினைப்போ? எதற்காக அவரிடம் போனாய்?" என்று திட்டினார், பேராசிரியரின் அறியாமை பற்றியும் ஏசினார்.

கடைசியில், "பொடியா! இங்கே உட்கார்" எனப் பேராசிரியர் வழக்கமாக உட்காரும் இடத்தைச் சுட்டிக் காட்டினார். பேராசிரியர் அவ்வாறே செய்தார்.

அம்மகான் தொடர்ந்தும் ஏதோவெல்லாம் பேசினார். ஆனால் பேராசிரியருக்கு அப்போதிருந்த மன நிலையில் எதுவுமே அவருடைய மனத்திற் பதியவில்லை.

அரைமணி நேரத்தின் பின்னர் அம்மகான் சொன்னார், "பொடியா! வழக்கம் போல் மாலையில் பிரசங்கம் செய்துவிட்டு இங்கே வா."

ஆனந்தம் கலந்த அதிர்ச்சி பேராசிரியருக்கு.

அவரால் பேசமுடியும் என்பதை அந்த மகான் உணர்த்திவிட்டாரே!

தான் உட்கார்ந்த இடத்திலிருந்து எழுந்து சுவாமிகளை விழுந்து வணங்கிவிட்டு "உத்தரவுப்படி செய்கின்றேன்" என்றார் பேராசிரியர்.

அன்றைய தினம் அவருடைய வாயிலிருந்து முதன் முதலாக வெளிவந்த வார்த்தைகள் அவை.

தொடர்ந்து யோகர்சுவாமிகள் சொன்னார், "பொடியா! சேக்கிழாரையும் கம்பனையும் நாங்கள் தானே வெட்டிப் புதைக்க வேணும். கவலையில்லாமல் போய் வா."

அவற்றின் அர்த்தம் என்ன என்பது சரியாகத் தெரியாவிட்டாலும், அந்தச் சித்த புருஷரிடம் விளக்கம் கேட்க முடியுமா?

வெளியே வந்த பேராசிரியர், யோகர்சுவாமிகளிடம் தன்னைப் போகுமாறு பணித்த அந்த மருத்துவப் பெருந்தகையிடம் சென்றார்.

தெருவிலிருந்தபடியே "டாக்டர்" எனப் பெருங்குரலெடுத்துக் கூவினார். ஓடோடி வந்த அந்த மருத்துவர், நடுத்தெருவில் சாஷ்டாங்கமாக விழுந்து பேராசிரியரை வணங்கினார். திகைத்துப் போன பேராசிரியர்.

"இவ்வளவு முதியவரான தாங்கள் என்னைக் கும்பிடலாமா?" என்று அன்புடன் கடிந்து கொண்டார்.

பேராசிரியரின் இரண்டு கைகளையும் பிடித்துக் கொண்டு உள்ளே அழைத்துச் சென்று அமர வைத்தார் மருத்துவ நிபுணர்.

அந்த நேரம்.

பணியாள் ஒருவன், இரண்டு விமானச் சீட்டுக்களை அந்த நிபுணரிடம் கொண்டு வந்து கொடுத்தான். அவற்றைப் பேராசிரியரிடம் கொடுத்தார் மருத்துவர். அவற்றுள் ஒன்று பேராசிரியர் சென்னைக்குச் செல்வதற்குரியது. மற்றையது அந்தப் பணியாளரின் பயணத்துக்குரியது.

ஒன்றும் புரியாமல் திகைத்துப்போயிருந்த பேராசிரியரிடம் மருத்துவ நிபுணர் சொன்னார்.

"ஐயா! உங்களுக்கு வந்த வியாதி, கோடிக்கு ஒருவருக்கு வரலாம்.

வந்தால் வந்ததுதான்.

அதுதான் அவருடைய முடிவு.

உங்களிடம் சொல்லாமல், நாளைக்கே உங்களைச் சென்னைக்கு அனுப்புவதற்கு முடிவு செய்தேன்.

பேசமுடியாத உங்களால் ஒன்றும் செய்ய முடியாது.

அதனால் தான் இந்த அன்பரையும் உங்களுடன் அனுப்ப முடிவு செய்தேன்.

காலையில் காரில் உங்களை ஏற்றும்வரை. எப்படி உங்களை ஊருக்கனுப்புவது என்ற எண்ணந்தான் என் மனத்தில் மேலோங்கி நின்றது.

நீங்கள் காரில் ஏறிய பிறகு, அதன் கதவைத் தொட்டுக்கொண்டு "சென்றுவாருங்கள்" என்று விடை கொடுக்க முயன்ற போதுதான் சுவாமிகளின் எண்ணம் திடீரென்று தோன்றியது.

நாற்பது வருடங்களுக்கு மேல் ENT நிபுணராகக் கொழும்பில் பணிசெய்த எனக்கு, மருத்துவ உலகம் உதவ முடியாத உங்களுக்கு இறைவனின் அருள் ஒன்றுதான் உதவமுடியும். அப்படியானால் அந்த அருளை வழங்கக்கூடிய இறைநேசர் யோகர்சுவாமிகள் ஒருவராகத்தான் இருக்க முடியும் என்ற எண்ணம் தோன்றியது.

அதனாலேதான் பகலிலே யாரும் சுவாமிகளிடம் செல்வதில்லை என்று தெரிந்திருந்தும் தங்களைப் போகுமாறு பணித்தேன். சுவாமிகளே அந்த எண்ணத்தை என் மனதில் தோற்றுவித்திருக்க வேண்டும்."

தழுதழுத்த குரலிற் கூறிய மருத்துவர், பேராசிரியரைத் தன் இல்லத்திலேயே நிற்கச் செய்து, மதிய போசனம் அளித்த பின்னர்தான் கரணவாய் செல்ல அனுமதித்தார்.

பேராசிரியரின் சொற்பொழிவு எவ்வித இடையூறுமின்றித் தொடர்ந்து நடைபெற்றது. சொற்பொழிவு முடிந்த பின்னர், ஒவ்வொரு நாளும் யோகர்சுவாமிகளிடம் சென்று அவருடைய ஆசியையும் பெற்றார்.

இந்த நிகழ்ச்சி நடந்த கால கட்டத்தில் "இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்", "நாடும் மன்னனும்" என்ற நூல்களையும் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் எழுதி வெளியிட்டிருந்தார்.

பின்னர் ஏறத்தாழ முப்பது நூல்களை எழுதி வெளியிட்டார்

அவற்றுட் பெரும்பாலானவை கம்பன், சேக்கிழார் பற்றியவையே.

எஸ். ராஜம் வெளியிட்ட கம்பராமாயண மூலத்திற்கு ஆசிரியர் குழுவில் ஒருவராகப் பணியாற்றினார், சென்னைக் கம்பன் கழகம் வெளியிட்ட"கம்ப இராமாயணம்" பதிப்பிற்குப் பல்கலைச் செல்வர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனாருடன் சேர்ந்து பணியாற்றினார். கோவைக் கம்பன் கழகம் வெளியிட்ட இராமாயண நூலுக்கும் அவரே முதன்மைப் பதிப்பாசிரியர்.

"பெரியபுராணம் - ஓர் ஆய்வு", "இராமன் பன்முக நோக்கில்" ஆகிய நூல்களையும் பிறரின் வேண்டுகோளுக்கிணங்க எழுதி வெளியிட்டார்.

தொல்காப்பியப் பொருளதிகாரத்திலுள்ள மெய்ப்பாட்டியல், உவமையியல் ஆகிய இரண்டிற்கும் புதிய முறையில் உரை எழுத முயன்றும், அது கைகூடவில்லை.

தமிழ்த் தென்றல் திரு. வி. க அவர்கள் திருவாசகத்துக்கு உரை எழுதுமாறு பேராசிரியரைக் கேட்டுக் கொண்டார்.

தன்னுடைய வாழ்க்கைக் குறிப்பிலும் திரு. வி. க. அது பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆனால், பேராசிரியரால் திரு. வி.. க. அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லை.

"கம்பனையும் சேக்கிழாரையும் நாங்கள் தானே வெட்டிப் புதைக்க வேண்டும்" என யோகர்சுவாமிகள் சொன்னதன் கருத்து, வெகு காலத்திற்குப் பின்னர்தான் பேராசிரியர் ஞானசம்பந்தன் அவர்களுக்குப் புரிந்தது.

அந்த இருவரையும் தாண்டி அப்பாற் செல்ல அவரால் முடியவேயில்லை.

"1916 ஆம் ஆண்டில் அரசங்குடி சரவண முதலியாருக்கு மகனாகப் பிறந்த நான் பெற்றிருந்த குரல் 1955 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இழக்கப்பட்டது.

யோகர்சுவாமிகள் என்ற சித்த புருஷரைச் சந்தித்த பிறகு இன்றுவரை நான் பேசும் குரல் அப்பெருமகனார் இட்ட பிச்சையாகும். இதில் ஆச்சரியப் படுவதற்கோ பெருமை அடைவதற்கோ ஒன்றுமில்லை. இத்தகைய மகான்களின் திருவருள் எத்தகையவர்களையும் காக்கும் திறன் உடையது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டு" என நன்றியுணர்ச்சியுடன் எழுதியிருந்தார் அமரர் பேராசிரியர் அ. ச. ஞான சம்பந்தன்.

# அவன் அருளாலே அவன்தாள் வணங்கி....

**- சிவா . சரணன் -**

சைவ சமயத்தவராகிய நமக்குச் சிவபெருமான் முழுமுதற் கடவுள். நமது சமயநூல்களிலும் புராணங்களிலும் குறிப்பிடப்படும் ஏனைய தெய்வங்கள், சிவபெருமானின் பல்வேறு அம்சங்கள்; தன்னுடைய அடியவர்களுக்கு அருள்புரிவதற்காக அவர் எடுக்கும் வெவ்வேறு வடிவங்கள்.

சிவபெருமான் எங்கும் இருப்பவர்; எல்லாம் அறிபவர் ; எல்லாம் வல்லவர்.

"எல்லாம் அவன் செயல்", "அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது" என்பவற்றில் உள்ள "அவன்" சிவபெருமானே.

சிவபெருமானுடைய திருவடிகளை- தாள் களை- நாம் வணங்கினாற்றான் அவனுடைய திருவருளைப் பெற்றுய்யலாம் என்பது நம்மெல்லோரினதும் திடமான நம்பிக்கை.

ஆனால் இந்த "முறை"யை மாற்றியமைப்பதைப் போல் தோற்றமளிக்கின்றது மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய சிவபுராணத்தில் உள்ள ஓர் அடி.

"அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" என்பதே அந்த அடி.

அவனுடைய தாளை வணங்கினால் அவனுடைய அருளைப் பெற்றுய்யலாம் என்று நாம் நம்பிக் கொண்டிருக்க, அவனுடைய அருள் இருந்தாற்றான் அவனுடைய தாளை வணங்கலாம் என்கின்றார் அவர்!

வணங்குவதன் விளைவு அருளா? அருளின் விளைவு வணங்குதலா?

"பைத்தியம் தீரவேண்டும் என்றால், கல்யாணம் கட்ட வேண்டும்- கல்யாணம் கட்டவேண்டுமானால் பைத்தியம் தீரவேண்டும்" என்பதைப் போலல்லவா இது இருக்கின்றது!

மாணிக்கவாசக சுவாமிகள் குழப்புகின்றாரா? அல்லது நாமே குழம்புகின்றோமா?

சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டவர் மாணிக்கவாசகர் சிவனருளை நிறையவே பெற்றவர் அவர். தான் பெற்ற பேறு, மற்றவர்களுக்கும் கிட்ட வேண்டும் என்று விரும்பியவர் அவர். மக்களை ஈடேற்றுவதே அவருடைய தலையாய நோக்கம். மக்களின் மனத்தைக் குழப்பிக் குலைப்பதன்று. ஆகவே அவருடைய திருவாசக அடியைச் சரியாக விளங்கிக் கொள்வதற்கு நாம்தாம் முயல வேண்டும்.

இந்த மண்ணிலே வாழ்ந்த சமயப் பெரியார்கள், சித்தர்கள், தென்னிந்தியத் தமிழகத்திலே தோன்றிய நாயன்மார்கள், இருடிகள், யோகிகள் போன்ற பலர் சிவபெருமானைத் தம் அகக்காட்சியிற் கண்டு, தாம் அடைந்த ஆனந்த அனுபவங்களைப் பற்றிப் பாடியும், எழுதியும், பேசியுமுள்ளார்கள்; சிவபெருமானுடைய பேரறிவை- பேராற்றலை- பேரருளைப் பற்றியெல்லாம் வியந் தும், நயந்தும், விதந்தும் கூறியிருக்கின்றார்கள். மெய்யன்புடன் தன்னை நினைந்து வணங்குபவர்களின் இன்னல் களைச் களைந்து இன்னருளைச் சொரிகின்ற சிவப்பரம் பொருளின் அளப்பருங்கருணையைப் பற்றி விளக்கியுள்ளார்கள்.

சைவப் பரம்பரையிற் பிறந்து சைவச் சூழலில் வாழ்கின்றவர்களுக்கு இவைபற்றி நன்கு அறியக்கூடிய வாய்ப்பு, அந்த அறிவின் துணையால்- தூண்டுதலால் சிவனைப் பற்றிச் சிந்திக்கின்ற வாய்ப்பு அதிகம் உண்டு. அடிக்கடி ஏற்படுகின்ற சிந்தனை காரணமாக, சிவபெருமான் அவர்களுடைய உள்ளங்களிலே குடிகொள்கின்றான்.

"சிந்திப்பாரவர் சிந்தையுள்ளான்" "சிந்தித்தென்றும் நினைந்தெழுவார்கள் சிந்தையில் நிற்குஞ் சிவன்." என்பவை சுந்தரர் தேவாரத்தில் நம் சிந்தையைக் கவர்பவை.

"நினைப்பவர் மனம் கோயிலாய்க் கொண்டவன்" என்பது திருநாவுக்கரசர் திருவாக்கு.

"எந்தையீசன் எம்பெருமா னேறமர்கடவுளென்றேத்திச் சிந்தை செய்பவர்க்கல்லால் சென்றுகை கூடுவ தன்றால்"

என்ற அடிகள் மூலம், சிவனைத் தரிசிக்கச் செல்வதற்கு, அவனைப் பற்றிய சிந்தனையை ஒரு முன் நிபந்தனையாக வைக்கின்றார் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்.

ஒருவருடைய சிந்தனையிலே இறைவன் - சிவபெருமான்- குடிகொண்டுள்ளான் என்றால், அந்த ஒருவரை இறைவன் வழிநடத்துகின்றான், நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி அருள்புரிகின்றான் என்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும்.

சிவபெருமானுடைய பேராற்றலை, பேரருட் சிறப்பினைப் பற்றிச் சிந்திக்கின்றவர்கட்கு அப்பெருமானை நேரிலே தரிசிக்க வேண்டும், வணங்கவேண்டும் என்ற ஆவல் எழுவது இயல்பு.

ஆனால், தேவரும் மூவரும் தேடிக் காணொணாத பரம்பொருளை நேரிற் தரிசிப்பது சாத்தியமா?

அடியவர்கள் மனந்தளரவோ தடுமாறவோ தேவையில்லை.

நாட்டின் பல்வேறு திருத்தலங்களிற் பிரதிஷ்டை செய்யப்பெற்றுள்ள விக்கிரகங்களை இறைவனாகவே பாவித்து, பாடிப் பரவுவதைத் தம் நாளாந்தக் கடமையாக வரித்துக்கொண்டதன் மூலம், எங்கும், எதிலும் நீக்கமற நிறைந்து கரந்து உறையும் இறைவன், அந்தச் சிலைகளிலே விசேடமாக வீற்றிருக்கின்றான் என்ற உண்மையை தெளிவாகவே நமது நாயன்மார்கள் எல்லோருக்கும் உணர்த்தியுள்ளார்கள்.. அத்தகைய ஆலய வழிபாடு அடியவர்களின் ஆவலைப் பூர்த்திசெய்யும்.

"அவன் அருளாலே அவன் தாள் வணங்கி - என்ற அடியுடன் அதற்கு முன்னர் வரும் **'சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்'** என்ற அடியையும் இணைத்துப் பார்க்கம்போது, சிவனைச் சிந்தையில் வைத்தால் அவன் சிறப்பாக அருள்புரிவான் என்ற தேவார முதலிகள் மூவரின் கருத்தோட்டமே மாணிக்கவாசக சுவாமிகளிடமும் இருந்துள்ளமை புலனாகின்றது.

இவற்றுடன் அடுத்துவரும்,

சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்"

ஆகிய அடிகளையும் இணைத்துப் பார்த்தால், மனம், வாக்கு, காயம் என்ற மூன்றையும் அவர் ஒருமுகப்படுத்துவதைக் காணலாம்.

சிவன் அவன் என் சிந்தையுள்- என்பதனால் மனமும், "உரைப்பன்" என்பதனால் வாக்கும், அவன் தாள் வணங்கி என்பதனால் - கைகள் - காயமும் குறிக்கப் பெறுகின்றன. மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களால் இறைவனை வணங்கவேண்டும் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

மாணிக்கவாசகர் கூறியதற்கிணங்க, சித்தத்திலே சிவனை இருத்தி நித்தமும் அவன் புகழ் பாடி அவன் தாள்களை வணங்கி நாமும் ஈடேறுவோம். ❋

**சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கினால் அவனுடைய திருவருள் கிடைக்கும் என நாம் நம்புகின்றோம்.**

**ஆனால் அவனுடைய திருவருள் இருந்தாற்றான் திருவடிகளை வணங்கலாம் என்கின்றார் மாணிக்கவாசகர்.**

**வணங்குவதனால் ஏற்படும் விளைவு திருவருளா? திருவருள் காரணமாக நிகழ்வது வணக்கமா?**

# சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவோம்.

**திருஞானசம்பந்தர் திருப்பதிகம்**

**திருப்பிரமபுரம் பண்: நட்ட பாடை**

**திருச்சிற்றம்பலம்**

**தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண் மதிசூடிக்**
**காடுடையசுட லைப்பொடிபூசியென்னுள் ளங்கவர்கள்வன்**
**ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தவருள் செய்த**
**பீடுடையபிர மாபுரமேவிய பெம்மான் இவனன்றே.**

**தோடு உடைய செவியன் விடையேறி ஓர் தூவெண்மதி சூடி**
**காடு உடைய சுடலைப்பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்**
**ஏடு உடைய மலரான் முனை நாள் பணிந்து ஏத்த அருள் செய்த**
**பீடு உடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே.**

**தோடு உடைய-** தோட்டினை அணிந்த, **செவியன்** திருச் செவியை உடையவனாய், **விடையேறி-** இடபவாகனத்தை ஊர்ந்து, **ஓர் தூவெண் மதி சூடி-** ஒப்பற்ற தூய்மையுடைய வெள்ளிய சந்திரனைத் தலையிற் சூடி, **சுடலை காடு உடைய-** சுடுகாட்டிலுள்ள, **பொடி பூசி-** விபூ தியை அணிந்து, **என் உள்ளம் கவர் கள்வன்-** என்னைத் தன்வயப்படுத்திக் கொண்டவன்.

**ஏடு உடைய -** இதழ்களை உடைய, **மலரான் -** தாமரை மலரில் உறைபவனாகிய பிரமதேவன், **முனை நாள் -** முற்காலத்தில், **பணிந்து ஏத்த-** தொழுது வழிபட்டதனால், **அருள்செய்த-** அந்தப் பிரமதேவனுக்கு அருள் புரிந்த, **பீடுடைய-** பெருமையையுடைய, **பிரமாபுரம்** பிரமாபுரம் என்று சொல்லப்படும் இங்கு, **மேவிய -** எழுந்தருளி யிருக்கும் **பெம்மான் இவன் -** இதோ என் கண்முன் தோன்றும் இறைவனே அவன்.

**குறிப்பு:-** ஏடுடைய மலரால் முனைநாட் பணிந்தேத்த அருள் செய்த- என்பதற்கு, இதழ்களையுடைய மலர்களால் முற்காலத்தில், அருச்சித்து வழிபட்டதனால், ஆளுடைய பிள்ளையாராக எனக்கு அருள் செய்த - எனக் கருத்துக் கூறுவர் கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார்.

தன் தந்தையாரான சிவபாதவிருதயரின் சொற்படி தீர்த்தக் கரையில் உட்கார்ந்திருந்த பிள்ளையார் (திருஞானசம்பந்தர்), நீராடச் சென்ற தந்தையாரைக் காணாது பயந்து அழுதார்.

சீர்காழித் தலத்திருந்த சிவபெருமானின் திருவுளப்படி, தன் திருமுலைப்பாலை வெள்ளிக் கிண்ணத்திற் கறந்து பிள்ளையாருக்கு ஊட்டினார் உமாதேவியார் பின்னர் சிவபெருமானும் உமாதேவியாரும். மறைந்து விட்டனர். நீராடிவிட்டு அவரிடம் வந்த சிவபாத விருதயர் தன் குழந்தையின் இதழ்க் கடையிலே பால் சிந்தக் கண்டு, "ஆ கொடுத்த பாலை நீ பருகினாய்?" எனக் கோபத்துடன் கேட்டார்.

அப்போது, இடபவாகனத்தி லமர்ந்து ஆகாயத்திற் காட்சியளித்த சிவபெருமானையும் உமாதேவியாரையும் சுட்டிக் காட்டி பிள்ளையார் பாடிய தேவாரப் பதிகத்தின் முதலாவது பாசுரம் இது. ❋

**தேவாரங்களை ஓதி இறைவனை வழிபடும் வழக்கம் சைவத் தமிழ் மக்களிடம் உண்டு.**

**பொருளை நன்குணர்ந்து உளமுருகப் பாடினால் இறையருள் இலகுவிற் கிடைக்கும்; முன் செய்த தீவினையின் வலு குறையும், நீங்கும்; இப்பிறவியில் நல்வினையைச் செய்யும் மனப்பாங்கு வளரும்.**

**சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவோர் சிவபுரத்திற்குச் சென்று சிவபிரானின் திருவடிக்கீழ் இன்புற்றிருப்பர் என்பதை மாணிக்கவாசகசுவாமிகள் சிவபுராணத்திற் கூறியுள்ளார்கள்.**

**வாசகர்களுக்கு உதவும் பொருட்டுத் தேவாரங்களின் கருத்தும் விளக்கமும் 'இந்து சாதனம்' இதழ்களிலே தொடர்ந்து வெளியிடப்படும்.**

## மழை நீரின் மகத்துவம்

உலகப் பரப்பில் மூன்று பங்கு தண்ணீராக இருந்தாலும் குடிநீர் சுமார் 2 சதவீதம் மட்டுமே. உலகில் உள்ள நீரிற் பெரும்பகுதி கடல் நீராகவே உள்ளது.

அந்தக் கடல் நீர் (உப்பு நீர்) ஆவியாகி, குளிர்ந்து மழையாகப் பொழிய நன்னீராகிறது.

ஆகையால் மழைநீரை அமிர்தம் என்றாலும் மிகையாகாது.

அந்த மழை நீரைக் கலன்களிலும் உபரி நீரை நிலத்தடி நீராகவும் சேமிக்கலாம்.

மழை நீர் 65 சதவீத நோய்களை நீக்கக்கூடியது. மழைநீரைத் தினந்தோறும் பருகினால் மலச்சிக்கலும் மனச்சிக்கலும் நீங்கும்.

ஐப்பசி மாத மழைநீரை அருந்தினால் உடல் குளிர்ச்சியாகும், சீதபேதி நீங்கும். தைமாத மழைநீரால் தானியம் பெருகும். சித்திரை மாத மழைநீரை உண்டால் சர்க்கரை நோய் (சலரோகம்), நீர்க்குத்தல், மூட்டுவலி நீங்கும். ஆலங்கட்டி மழை நீரால் கண் நோய் குணமாகும், தேள்கடி விஷத்தை நீக்கும்.

**இர. இராமலிங்கம்**
***செயலர்,***
**ஆடுதுறை இயற்கை மருத்துவ சங்கம்.**

உ



திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்து சாதனம்
## Hindu Organ
email: editor @ hindu organ. com

சர்வதாரி ஞூ தை மாதம் மு 1ஆம் உ (14.01.2009


# வசதியாக வாழ்கிறோம்... மகிழ்ச்சியாக இல்லையே

விஞ்ஞானத்தின் விந்தைகள் பெருகிவருகின்ற ஒரு கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

எவ்வித வேறுபாடுமின்றி, ஒவ்வொருவருடைய அந்தரங்கத்திலும் ஆழ்ந்து கிடக்கின்ற ஆசை – நோய் நொடியின்றி நீண்டநாள் வாழ வேண்டும் என்கின்ற ஆசை– நிறைவேறாதா என்ற ஏக்கம் நீங்கி வருகின்றது. கொடிய நோய்களைக் கண்டறிவதிலும சிகிச்சை அளிப்பதிலும் கையாளப்படும் புதிய நுட்பமான முறைகள், பொருத்தமான புதிய மருந்து வகைகள், குழாய் மூலமான குழந்தைப் பேறு போன்றவற்றால் மக்கட் பெருக்கம், ஆயுள் நீடிப்பு, ஆரோக்கிய வாழ்வு முதலியவை சாத்தியமாகியுள்ளன.

வெய்யில், மழை, பனி, காற்று போன்ற இயற்கைச் சக்திகளின் கடுந்தாக்கங்களையும் சகித்துக் கொண்டு காலை முதல் மாலைவரை கஷ்டப்பட்டு உழைத்தாற்றான் கால்வயிற்றையாவது நிரப்பலாம் என்ற நிலை மெல்ல மெல்ல மாறிவருகின்றது. சிறிய, நடுத்தர, பெரிய இயந்திரங்களும் கருவிகளும் மக்களுக்கு "உதவியும் ஒத்தாசையும்" வழங்கி வருகின்றன. அவர்களின் ஓய்வுக் காலத்தை நீடித்து வருகின்றன.

இவ்வாறே கல்வி, விவசாயம்,பொருளுற்பத்தி,வர்த்தகம்,போக்குவரத்து,தொடர்பாடல் போன்ற ஏனைய துறைகளிலும், விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சி மக்களுக்குச் சாதகமான மாற்றங்களையும் முன்னேற்றங்களையும் ஏற்படுத்தி வருகின்றன.

இவை அனைத்தினதும் விளைவாகப் பூரண மகிழ்ச்சி, மனநிறைவு, நிம்மதி, உற்சாகம் முதலியவை அனைத்து மக்களிடமும் ஏற்பட்டிருக்க வேண்டுமல்லவா?

ஆனால், அவற்றிற்குப் பதிலாக, அமைதியின்மை, சோகம், துன்பம், பகைமை, விரக்தி போன்றவற்றையல்லவா நாம் பரவலாகக் காண்கின்றோம்!

காரணம் என்ன?

விண்வெளி ஆராய்ச்சி வரை உயர்ந்தும், வளர்ந்தும், விரிந்தும் சென்று கொண்டிருக்கும் விஞ்ஞான ஆராய்ச்சிகள், அவை தரும் தகவல்கள், எட்டப்படும் புதிய முடிவுகள், மக்களின் இறை நம்பிக்கையை ஆட்டங் காணச் செய்துவிட்டனவா?

அந்த இறைநம்பிக்கையிலிருந்து கிளைத்தெழும் அன்பு, கருணை, அறம், தியாகம் போன்ற விழுமியங்களின் சிறப்பையும் இன்றியமையாமையையும் அரித்தும், கரைத்தும், அழித்தும் விட்டனவா?

அதனால், நானே தலைவன்; நானே பெரியவன்; எனக்கு மேலே எவரும் இல்லை; என்னால் முடியாதது எதுவுமில்லை. நான் எதைச் சொன்னாலும்- செய்தாலும், தட்டிக் கேட்பதற்கும் யாருமேயில்லை என்ற அகந்தைத் திமிரை மனிதனுக்குட்புகுத்தி விட்டனவா?

அழிவையும் அனர்த்தங்களையும் விளைவிக்கும் ஆயுதமாக விஞ்ஞானத்தைப் பயன்படுத்தும் அரக்கத்தனத்தை அந்தத் திமிர்தான மனிதனுக்கு ஏற்படுத்தி விட்டதா?

பொறுப்புணர்ச்சியுடனும் கடமையுணர்ச்சியுடனும் ஆழமாகவும் நேர்மையாகவும் ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டிய கேள்விகள் இவை.

மனிதர் ஒவ்வொருவரும் ஒரே நேரத்திலேயே இரண்டு "வாழ்க்கை"யைப் பற்றிச் சிந்தித்துச் செயற்பட வேண்டியவர்கள்; ஒன்று அழியுந் தன்மையுள்ள உடம்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இவ்வுலக வாழ்க்கை, இலௌகீக வாழ்க்கை; மற்றது அழியாத்தன்மையுடைய உயிரின் ஈடேற்றத்துக்கு வழி வகுக்கும் ஆன்மீக வாழ்க்கை. எவ்வித முரண்பாடும் இல்லாமல், இரண்டையும் இணைத்தும் பிணைத்தும் வாழவேண்டியது இன்றியமையாதது.

இலௌகீகவாழ்க்கைக்கு விஞ்ஞானம் உதவும். இறையருளை நோக்கமாகக் கொண்டு, அன்பு, கருணை போன்ற விழுமியங் களின் அடிப்படையில் அமைவது ஆன்மீக வாழ்க்கை.

நெருப்பைப் பயன்படுத்தி உணவைச் சமைக்கலாம்; குடியிருக்கும் வீட்டையும் கொழுத்தலாம். கத்தியால் காய்கறிகளை அரியலாம் கழுத்தையும் அறுக்கலாம்.

விஞ்ஞானத்தை ஆக்கத்துக்கும் பயன்படுத்தலாம்; அழிவுக்கும் பயன்படுத்தலாம்.

ஆன்மீகச் சிந்தனை வலுப்பெற்றால், விஞ்ஞானத்தை, நன்மைபயக்கின்ற -ஆக்கபூர்வமான நோக்கங்களுக்காக மட்டும் உபயோகிக்கும் மனப்பாங்கு வளரும், செழிக்கும்; கோபம்; பகை, வெறி, போர், பழிக்குப் பழி போன்றவை தாமாகவே மறையும், மடியும்

மண்ணில் நல்ல வண்ணம் வாழவும், பின்னர் விண்ணில் நல்லின்பத்தைத் துய்க்கவும் விழைவோர்க்கு இவை சமர்ப்பணம். ❋

# சைவபரிபாலன சபை தோற்றமும் வளர்ச்சியும் பணிகளும் – 23

பேராசிரியர் இ. குமாரவடிவேல்

## ஏழாவது மகா சபைக் கூட்டம்

1895 ஆடி முதல் 1897 மார்கழி வரையான காலத்திற்கான அறிக்கையும் கணக்குகளும் வாசிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன.

சபை யாப்பிற்கு அமைய அறுபது பேர் கொண்ட அதிகார சபையொன்று தெரிவானது. அவ்வதிகார சபை உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவாகினர்.

காப்பாளர்: திரு.பொ. குமாரசுவாமி

தலைவர்:
திரு. தா. செல்லப்பாபிள்ளை

உபதலைவர்:
திரு. அ. கனகசபைப்பிள்ளை

செயலாளர்:
திரு. வி. காசிப்பிள்ளை

உபசெயலாளர்:
திரு. த. கைலாசபிள்ளை

பொருளாளர்:
திரு. சித. மு. பசுபதிச்செட்டியார்

அதிகாரசபை அத்தினமே கூடி மேற்கண்ட உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய இருபத்துமூன்று பேர் கொண்ட நிருவாகசபையைத் தெரிவு செய்தது.

சைவபரிபாலன சபை அங்கத்தவர்கள் சிலரும் பிறரும் வித்தியாரம்பம், விவாகம், புத்திரப்பேறு, அந்தியேட்டி, சிராத்தம் முதலிய கருமங்களின் போது ஒரு தொகைப் பணத்தைச் சைவபரிபாலன சபைக்கு நன்கொடையாக வழங்கி வந்தமைபற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். இவ்வகையில் மேற்குறித்த இருபத்தெட்டரை மாத காலத்தில் சேர்ந்த தொகை ரூபா 144 - 72 ஆகும்.

சைவபரிபாலன சபையின் பொருளாளர் சித. மு. பசுபதிச்செட்டியார் அவர்கள் 1895 ஆம் ஆண்டு சித்திரை மாதம் இந்தியா சென்று திரும்பிய போது இந்துக் கல்லூரிக் கட்டடத்தில் மரவேலை செய்யவல்ல ஆசாரிமாரை அழைத்து வந்தமையை முன்னர் குறிப்பிட்டிருந்தோம். அவ்வாசாரியரைக் கொண்டு உபயோகமாகாத கழிவு தேக்கு, பாலை மரங்களில் வீட்டுத் தளபாடங்கள் செய்வித்து விற்பித்தார். இவ்வாறாக விற்றுத் தேறிய பணம் ரூபா 1025-73 1/2. பாடசாலைப் பிள்ளைகளுக்குத் தேவையான புத்தகங்களைத் தருவித்து இந்துக் கல்லூரியில் வைத்து விற்பனை செய்யவும் பசுபதிச்செட்டியார் அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார். அவ்வாறு தருவித்த புத்தகங்களின் கொள்வனவு விலை ரூபா 1202 - 43 1/2. அவற்றை விற்றுப் பெற்றுக்கொண்ட தொகை 1343 - 78. ஆகவே ரூபா 141 - 34 1/2 இந்துக் கல்லூரிக்கு இலாபமாகப் பெறப்பட்டது. இவற்றை எல்லாம் பம்பாய் (மும்பாய்), கல்கத்தா (கொல்கத்தா) முதலிய நகரங்களிலுள்ள புத்தக வியாபாரிகளுக்குப் பசுபதிச் செட்டியார் அவர்கள் அக்காலத்தில் எழுதிய கடிதங்களின் பிரதிகளிலிருந்தும் சைவபரிபாலனசபைக் கணக்குகளிலிருந்தும் அறியக் கூடியதாயிருந்தது.

குறைந்த வேதனம் பெற்றுக் கொண்டு திரு. பசுபதிச்செட்டியாரின் இம்முயற்சிகளுக்கெல்லாம் காலை ஆறு மணிமுதல் இரவு ஒன்பது மணி வரை உதவி வந்தவர் திரு. வீ. தம்பியப்பா என்பவராவர். கிறிஸ்துமத கண்டனசபை தொடங்கிய காலத்தில் அதிலும், சபை தொடங்கிய காலத்தில் அச்சபையிலும் அங்கத்தவராயிருந்த வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் நாவலர் பெருமானது சிதம்பரம் நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலைக்குத் தர்மபரிபாலகராக நியமிக்கப்பட்டுச் சிதம்பரத்திலிருந்த காலத்திலும் இச்சபைக்கு வேண்டிய உதவிகள் செய்து வந்தார். இவரைப் போலவே மேற்கூறிய சபைகளிரண்டிலும் அங்கத்தவராயிருந்த கந்தர்மடம் சி. தம்பையாபிள்ளை என வழங்கிய சுவாமிநாதபண்டிதர் அவர்களும் தமிழ்நாடு தேவகோட்டைப் பகுதியில் போதனாசிரியராக இருந்த காலத்திலும் இச்சபைக்குப் பொருளுதவி புரிந்தும் புரிவிக்க நினைத்தும் இருந்தார். இது அக்காலத்தில் அவர் பசுபதிச் செட்டியாருக்கு எழுதிய கடிதங்களால் அறியக் கிடக்கிறது. அவ்வாறான கடிதங்களொன்றில் பின்வருமாறுள்ளது:

"........ 11 உ தாங்கள் அனுப்பிய அன்புரிமைக் கடிதம் கண்டு கழி பேருவகையுற்றேன். நகரத்தார்கள் விஷயத்தில் நான் எண்ணியிருக்கும் எண்ணம் மிகப் பெரிது. சிவபிரான் சிறிது அருள் சுரப்பரேல் இந்து கொலிஜிக்கு வேறுகை பார்க்கவேண்டியதில்லை....... மடங்களிலும் செமீன்களிலும் நல்லதொகை வாங்கலாம். காரியமில்லை என்று எண்ண வேண்டாம். சிலசில செமீன் கடனோடு இருந்தாலும் "சைவபரிபாலன சபைக்கு" கடன் வாங்கியியேனும் கொடுக்கும் ........... ஆனி மாதம் சிதம்பரத்துக்கு என்ன முக்கியமான வேலையிருந்தாலும் அதனை நிறுத்திவிட்டு வந்து சேரவேண்டியது. எல்லாவற்றிற்கும் முடிவு எடுத்துக் கொள்ளுவோம்......."

(தொடரும்)

**சைவ பரிபாலன சபை தோற்றமும் – வளர்ச்சியும் பணிகளும் –23**

**யாழ். பல்கலைக் கழகப் பேராசிரியர் இ. குமாரவடிவேல் எழுதி, 2001.10.02 ஆம் திகதியிட்ட 'இந்து சாதனம்' இதழில் வெளியான தொடர் கட்டுரையின் 23 ஆவது பகுதியை மறுபிரசுரஞ் செய்கின்றோம். 24 ஆவது பகுதி அடுத்த இதழில் வெளியாகும்.**



# மாணவர் பகுதி



email: exame @ hindu organ. com

**மாணவச் செல்வங்களே!**

வணக்கம். பெயரளவில் மட்டும் சைவர்களாக வாழாமல், சைவசமய உண்மைகளையும், விளக்கங் களையும் வாழ்க்கை முறையையும் தெளிவாக அறிந்து சமய வாழ்க்கை வாழ்வதற்குச் சிறுவயதிலிருந்தே நீங்கள் முயற்சி செய்தல் வேண்டும்.

சமயம் சம்பந்தமான பல விஷயங்கள், உங் களுக்கு நன்கு விளங்கும் வகையில் அமைந்த ஆக்கங்கள் இப்பகுதியில் இடம்பெறும்.

உங்களுடைய வயது, அறிவு, அனுபவம் போன்ற வற்றிற்கு ஏற்ப, நீங்களும் கட்டுரை, கவிதைகளை எழுதி அனுப்பலாம்.

நல்ல, தரமான ஆக்கங்களை வெளியிட்டு உங்களை ஊக்குவிப்போம்.

எந்த நல்ல செயலைச் செய்ய முனையும் போதும் விநாயகப் பெருமானை வணங்கிக் கொணடு அதைத் தொடங்குவது நமது வழக்கமாகும்.

எவ்வித கஷ்டமும் இல்லாமல் அச்செயலை வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்கு விநாயகப் பெருமான் உதவுவார் என்ற நம்பிக்கை நமக்குண்டு.

விநாயகப் பெருமான் சம்பந்தமான பல விஷயங்களைக் கேள்வி, பதில் முறையில் 'சொல்லின் செல்வர்' திரு. இரா. செல்வவடிவேல் எழுதியுள்ளார்.

அவர் ஒரு நல்லாசிரியர், சிறந்த சமய இலக்கியச் சொற்பொழிவாளர், சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர்.

இந்துசாதனம்,<br>கல்லூரி வீதி, நீராவியடி.<br>யாழ்ப்பாணம்.

உங்கள் கருத்துக்களை<br>எழுதியனுப்புங்கள்<br>- குருநாதன்

## சைவசமய அறிவை வளர்ப்போம்

# விநாயகர்

**1. விநாயகர் - என்பதன் பொருள் யாது? விளக்குக.**

நாயகர் - தலைவர்

வி + நாயகர் - தனக்கு மேல் ஒரு தலைவன் இல்லாதவர். "ஓம் அநீஸ்வராய நம" என்னும் மந்திரத்திற்கு தனக்கு மேல் ஒரு ஈசுவரன் இல்லாதவர் என் பதே பொருள். வழிபடுவோரின் இடையூறுகளைப் போக்குபவ ராதலின் விக்னேசுவரர் என் றும்,கணங்களுக்குத் தலைவ ராயிருப்பதால் கணபதி என் றும் இவர் வணங்கப்படுகிறார்.

**2. விநாயகர் வடிவத்தின் தத்து வம் யாது?**

விநாயகர் வடிவம் யானைத் தலையும் பெருவயிறும் மனித உடலும் ஐந்து திருக்கை களும் கூடிய வடிவம். விநாய கருக்கு இடையின் கீழ் மனித உடல்; இடைக்குமேல் கழுத்து வரை தேவ உடல்; மேலே விலங்கின் தலை; பூதப் பெரு வயிறு. ஒரு பக்கம் கொம்பு - ஆண் தன்மை, மற்றொரு பக்கம் பெண் தன்மை.

அஃறிணை, உயர்திணை அம்சங்கள் பொருந்திய இந் நிலையை நோக்கின் விநாயகர் தேவராய், மனிதராய், பூதராய், விலங்காய், ஆணாய், பெண்ணாய் எல்லாமாகத் திகழ்கிறார் என்பது புலனாகும்.

**3. விநாயகரின் ஐந்து கரங்களில் உள்ளவை யாவை?**

1. துதிக்கையில் நீர்க்குடம்
2. பின் இடக்கரம் பாசம்; பின் வலக்கரம் அங்குசம்
3. முன்கைகளில் வலக்கை யில் ஒடித்த கொம்பு (தந் தம்) இடக்கையில் மோத கம்.

**4. பிள்ளையார் சுழியின் பொருள் யாது?**

பிள்ளையார் சுழி என்பது அக ரம், உகரம், மகரம் (அ, உ, ம) ஆகிய மூன்றையும் அடக்கியுள்ள நாதப்பிரமமாகிய "ஓம்" என்னும் பிர ணவத்தின் ஆரம்பவடிவம். அதில் உள்ள வட்டவடிவம் சிவசக்தி பீடம், கோடு சிவலிங்கம் என்றும் சொல்லப்படும். எழுதத் தொடங்கு முன் பிள்ளையார் சுழியை எழுது வது,எழுத மேற்கொள்ளும் செயல் இடையூறின்றி முடிய கணபதியை நிறுத்தி வழிபடுவதைப் போன்ற தாகும்.

**5. விநாயகர், பஞ்சபூதத் தொடர்பு டைய இருக்கையுடையவ ராகத் திகழ்கிறார் என்பதை எவ்வாறு அறிகிறோம்?**

விநாயகர் இருக்குமிடம்:

1. அரசமரம் - ஆகாயம்
2. வாதராயணமரம் - வாயு
3. வன்னிமரம் - அக்கினி (தேயு)
4. நெல்லிமரம் - நீர் (அப்பு)
5. ஆலமரம் - மண் (பிருதிவி)

தொடர்புடையவை.

- தொடரும்

# திருஞானசம்பந்தரும் சைவ மறுமலர்ச்சியும்

**செல்வி புஷ்பா செல்வநாயகம்**

திருஞானசம்பந்தர் தமிழ் இசைக்கும் இறைவன் புகழுக்கும் தம் பாடல்களில் முதலிடம் அளித்தார். ஆங்காங்கே சைவசித்தாந்தக் கருத்துக்களையும் பொறித்துள்ளார்.

இயற்கை அன்னையின் மடியிலே தவழ்ந்து, அவளின் திருவருளை உண்டு, மகிழ்ந்து அக்காட்சிகளைத் தமிழ்மொழியில் குழைத்து வழங்கியுள்ளார். நால்வகை நிலங்கள், அங்கெல்லாம் இயற்கை களிநடம் கொண்டு குதூகலிக்கும்போது தோன்றும் வண்ணவண்ணக் கோலங்களை எல்லாம் தம் குழந்தை உள்ளத்தோடு இரசித்துப் பாடல்களாக வடித்துள்ளார்.

**தமிழ் நாட்டிலே சமணமும் பௌத்தமும் தலையெடுத்திருந்த காலத்தில் தன்னுடைய இனிய தமிழ்ப் பதிகங்கள் மூலம் மக்களிடம் சைவ உணர்வை வளர்த்த திருஞானசம்பந்தர். சைவப் பணி செய்தவர்களைப் பாராட்டியும் பாடியுள்ளார்.**

**சைவசமய மறுமலர்ச்சிக்குச் சம்பந்தர் ஆற்றிய பணிகளின் பாங்கை விதந்துரைக்கின்றார் சிறந்த சமயச் சொற்பொழிவாளரும் யாழ். இந்து மகளிர் கல்லூரியின் முன்னை நாள் உபஅதிபருமான செல்வி புஷ்பா செல்வநாயகம்.**

அத்துடன் நிற்காமல் தம்முடன் சேர்ந்து சைவத் தொண்டு செய்த சிவனடியார்களையும் தம்முன் வாழ்ந்த சிவனடியார்கள் சிலரையும் குறித்துப்பாடிப் பெருமைப்படுத்தியுள்ளார்.

திருஞானசம்பந்தர் காலத்துக்கு முற்பட்டவர்களில் ஒருவர் சண்டீசர். ஆற்றுமண்ணால் லிங்கம் அமைத்து, ஆவின் பாலால் தினம் முழுக்காட்டி சிவபூசை செய்து தந்தையின் சினத்துக்கு இலக்காகியபோதும், சிவப்பேறு பெற்றவர் இவர்.

சிவத்தொண்டு செய்த சோழ மன்னருள் காலத்தால் முந்திய கோச்செங்கண்சோழன் எண்டோளீசர்க்கு மாடங்கள் எழுபது எழுப்பியதை, "செம்பியன் கோச்செங்கணான் செய்கோயில்" என்று பாராட்டுகிறார். கண்ணப்பர். காளத்தி நாதருக்குச் செய்த வழிபாடு, கண்ணை இடந்தப்பியது பற்றியும் தண்டி அடிகளையும், நமிநந்தியடிகளையும் பாராட்டிப் பாடியுள்ளார்.

அத்துடன் நில்லாது தமது சமகால அடியார்களுள், திருநள்ளாறு சென்றபோது தமக்குத் தங்குவதற்கு இடம் தந்த திருநீல தக்க நாயனாரையும் திருப்புகலூரில் மடம் அமைத்து அம்மடத்தில் அப்பர் அடிகளைச் சந்திப்பதற்குத் தனக்கு வழிசெய்த முருகநாயனாரையும் தமிழகத்தில் முதல்முதலாக விநாயக வழிபாட்டை ஆரம்பித்த பரம்சோதியார் என்ற சிறுத்தொண்டரையும் திருஞான சம்பந்தர் பாடியுள்ளார்.

சமணசமயத்தில் மூழ்கிக்கிடந்த நாட்டை சைவ சமயத்திற்குத் திருப்பிய சீரும் சிறப்பும் பெற்ற மங்கையர் திலகமாகிய மங்கையர்க்கரசியாரையும் இம் மாதரசியின் சைவத் திருப்பணிக்குத் துணைநின்று அருந்தொண்டு புரிந்த குலச்சிறை நாயனாரையும் விதந்து பாடியுள்ளார் திருஞானசம்பந்தர்.

நால்வருள் திருஞானசம்பந்தரே கூடுதலாக புறச்சமயங்களைத் தாக்கியுள்ளார். சமணம், புத்தம் முதலிய சமயங்கள் அவர் காலத்தில் பரவலாகப் பரவி இருந்தும் சமணசமயமே மேலோங்கி இருந்தது. எனவே புறச்சமய கண்டனத்தின் பால் கால் ஊன்றி நின்ற திருஞான சம்பந்தர் தம் பாடல்களில் பதிகம் தவறாது புறச்சமய வாதிகளைத் தூற்றுகிறார். சைவத்திற்கு உறுதுணையாகவும், வலுவும் வாழ்வும் தருவதாகவும் உள்ள வேதத்தை சமணர் தாக்குவதைக் கண்ட சைவ அடியார் ஆகிய சம்பந்தருக்குப் பொறுக்கவில்லை. அதனால் அவர் சமணர்களைத் திட்டுகிறார்.

திருஞானசம்பந்தரது தோற்றத்தால் தமிழ் நாட்டு வரலாற்றிலும் மக்களின ஆன்மீக வாழ்க்கையிலும் பெரிய மாற்றம ஏற்பட்டது. சிறப்பாகக் கூற வேண்டுமானால் சைவ சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் திருஞானசம்பந்தரே எனலாம். சங்ககாலத்திலோ, சங்க மருவிய காலத்திலோ தமிழ் மக்கள் சமயம் பற்றி அதிக அளவிற் கவலை கொள்ளவில்லை என்பதற்கு அக்காலத்து சமயப் பாடல்கள் மிக மிக அருகி இருந்தமையே சான்று. சமயத்தைப் பற்றிக் கவலைகொள்ளாமல் வாழ்ந்த தமிழ் மக்களைத் தம் இனிய தமிழ்ப் பாக்களால் தட்டியெழுப்பி சமய உணர்வினை ஊட்டி, இறைவன்பால் பக்தி கொள் எச்செய்து, நாளும் இறைவனைப் பாடிப் பரவி பக்தி வெள்ளத்தில் மூழ்கச் செய்த பெருமை திருஞானசம்பந்தரையே சாரும். சமணம், புத்தம் முதலிய ஏனைய சமயங்களைப் போல் சைவசமயத்தையும் ஓர் அமைப் புடைய சமயமாக நாட்டில் நடமாடச் செய்தவரும் அவரே.

சைவமணமும் இசையழகும் தமிழ் வளமும் கொழிக்கும் இவரது ஆயிரக்கணக்கான திருப்பாடல்கள் நாடெங்கும் பரவி மக்களிடம் சமய உணர்வை ஏற்படுத்தின. நாடெங்கும் சைவமாரி பொழிந்தது. மக்களுக்குச் சமயப் பற்று மிகுதியாக உண்டாயிற்று. இதன் விளைவாகக் காணும் இடங்களில் எல்லாம் சிவன் கோவில்கள் எழுந்தன. பழைய கோவில்கள் புதுப்பிக்கப்பட்டன. கோவில்களில் திருஞானசம்பந்தர் இயற்றிய தமிழ்ப் பதிகங்களை ஓதுவதற்குப் பல்லவ மன்னர்கள் காலத்திலேயே ஏற்பாடு செய்யப்பட்டது. மகளிரும் ஆடவரும் மலர்களைக் கொணர்ந்து வழிபட்டனர். அடியவர்கள் அந்திப் பொழுதில் தூபதீபங்களுடன் அர்ச்சனைகள் செய்தனர். முற்றும் துறந்த முனிவர்களும் கூட இறைவனை வணங்கினர். இவை யாவும் திருஞானசம்பந்தரால் விளைந்த மாற்றங்கள் ஆகும். சைவசமயத்தின் மறுமலர்ச்சிக்கு வழிசமைத்த திருஞானசம்பந்தரின் திருத்தொண்டினை மக்களும், மன்னரும், மாநிலத் தலைவர்களும் பெரிதும் போற்றிப் பாராட்டி விதந்துரைத்துள்ளனர். நாமும் அவர்வழி நிற்போமாக. ❋

# தலைவரின் செய்தி

இந்துசாதனம் - Hindu Organ - இருமொழி இதழ்கள் 1889 ஆம் ஆண்டு சிர சுதயங்கண்டன.

காலத்தின் கண்ணாடியாக நின்று தாம் சார்ந்த இலட்சியவழியில் இருமொழிகளிலும் இந்த ஏடுகள் பிரசுரமாகி வந்தன.

1940 ஆண்டு வரை இந்துசாதனம் Hindu Organ பத்திரிகைகள் குடாநாட்டு மக்களின் வழிகாட்டி யாக அம்மக்களின் குரலாக ஒலித்தன.

கொழும்பு தமிழ்த் தினசரிகள் விநியோகம் யாழ். குடாநாட்டிலும் தடம்பதித்தன. இது சமய ஏடுகளை இது மிகவும் பாதித்தது.

என்றாலும், இந்துசாதனம் அண்மித்தகாலம் வரை பிரசுரமாகிக் கொண்டே இருந்தது. இடையே வந்த நிர்வாகச் சீர்கேடு பத்திரிகைப் பிரசுரத்தை மழுங்கடித்து விட்டது.

சைவநெறி மீதான பற்றும் ஆர்வமும் உள்ள உறுப்பினர்கள் முயற்சியால் மீண்டும் இந்துசாதனம் மலர்கின்றது.

தமிழ் இலக்கியத்தின் இருண்ட காலம் போன்று இந்து சாதனம் ஏடும் இருண்ட காலத்தைக் கடந்து விட்டது.

பகலவனின் ஒளி போன்று இந்துசாதனம் திங்கள் தோறும் மலர, கூத்தப்பெருமான் கழல் தொட்டு வணங்கி நிற்கின்றேன்.

*சைவபரிபாலன சபை,* **த. சண்முகலிங்கம்**
*யாழ்ப்பாணம்.* *தலைவர்*

## விநாயகி

**விநாயகர் உருவம் ஆண் உருவம்.**

**பெண் உருவில் இருக்கும் விநாயகர் உருவத்தை விநாயகி என்றும் கஜானனி என்றும் சொல்கிறார்கள்.**

**வடக்கே ஜபல்பூர் அருகிலுள்ள பீராகோட் என்ற இடத்திலும் தெற்கே சுசீந்திரம் கோயிலிலும் விநாய கருக்குப் பெண் வடிவம் உண்டு.**

**திருவண்ணாமலை அ மன் சந்நிதியின் எதிர்ப் புறம் உள்ள தூணில் விநாயகி நவடிவம் உள்ளது.**

- **தினமலர் பக்திமலர் - 003**
- **மெய்கண்டார் - ஜப் ி, கார்த்திகை - 2003**

**அடியார் மனத்தி அவர்கள் விரும்பும்**
**வடிவாய்த் திகழ் தே வரங்கள் சொரிவாள்**
**முடியா இடர்கள் முறையா யழித்தே**
**விடிவாய் விளங்கும் விநாயகி போற்றி.**

**2003 - கலைமகள் தீபாவளி மலரில் இடம்பெற்ற திருவுருவப்படத்தை இந்த இதழின் முதலாம் பக்கத்தில் நன்றியுடன் வெளியிடுகின்றோம்.**

# இங்கே இப்படி!

மார்கழி மாசத்தில் திருவெம்பாவைக் காலத்தில் சைவாலயங்களில் அதிகாலையில் நடைபெறும் விசேட அபிஷேகம், பூசையைத் தொடர்ந்து திருவெம்பாவைப் பாடல்கள் ஓதப்படுவது வழக்கம்.

"கோயில்" எனச் சிறப்பாகக் குறிப்பிடப்படும் தில்லைச் சிதம்பரத்திலும் வேறு சில ஆலயங்களிலும் திருவிழாவும் நடைபெறும்.

ஆனால் இக்கோயில்கள் எதிலும் இல்லாத ஒரு நடைமுறை ஈழத்துச் சிதம்பரம் - காரைநகர் சிவன் கோவிலில் உண்டு.

இத்திருத்தலத்திலே காலையில் மட்டுமல்ல மாலையிலும் திருவெம்பாவை ஓதப்பட்டு வருகின்றது.

மாணிக்கவாசக சுவாமிகளின் திருவுருவத்தை நடராஜப் பெருமானின் சந்நிதிக்கு எழுந்தருளச் செய்து, அந்தப் பத்துத் தினங்களிலும் காலையிலும் மாலையிலும் ஒரே ஓதுவாரே அவருக்கு அண்மையில் நின்று திருவெம்பாவை ஓதுவார்.

அதன் பின்னர், மாணிக்கவாசகர் உள்வீதி வலம் வருவார். பகல் வேளையில் திருவிழாவும் நடைபெறும்.

# இறைவன் எழுதிய மூலப்பிரதி

திருவாசகத்தை மாணிக்கவாசகர் சொல்ல, அந்தணர் வடிவில் வந்த இறைவனே ஏட்டில் எழுதினார் என்பது வரலாறு.

தில்லை நடராஜப் பெருமானின் சந்நிதியில் பஞ்சாக்கரப் படியில் வைக்கப்பட்டிருந்த இந்த மூலப் பிரதி, ஓர் ஆசரீரி வாக்கின்படி, தில்லையிலுள்ள அம்பலத்தாடும் சுவாமிகள் மடாலய அதிபருக்கு வழங்கப்பட்டது.

மடாலய அதிபர், நடராஜப் பெருமானின் கோவிலுக்கு வடகிழக்கில், முன்னர் மாணிக்கவாசகர் தங்கியிருந்த இடத்தில் ஆவுடையார் கோயிலைக் கட்டி மாணிக்கவாசகரின் ஐம்பொன் சிலையையும் திருவாசக மூலப் பிரதியையும் எழுந்தருளிவித்தார்.

முகலாயரின் படையெடுப்பின்போது இவையிரண்டும் புதுச்சேரிக்குக் கொண்டு போகப்பட்டு, அங்கு புதிதாக ஏற்படுத்தப்பட்ட அம்பலத்தாடும் சுவாமிகள் மடலாயத்தில் எழுந்தருளிவிக்கப்பட்டு இன்றும் வழிபடப்பட்டுவருகின்றன.

**ஆதாரம்: திருப்பெருந்துறைவரலாறு.**

## வாசக நேயர்களே!

**நமது சமயம் சம்பந்தமான கட்டுரைகள், கவிதைகள், தகவல்களை உங்களிடமிருந்து எதிர் பார்க்கின்றோம்.**

**தெளிவான நடையில் அழகான எழுத்தில் எழுதியனுப்புங்கள்.**

**இந்த இதழைப் பற்றிய உங்கள் கருத்துக் களும் வரவேற்கப்படுகின்றன.**

**ஆசிரியர்,**
**இந்து சாதனம்,**
**கல்லூரி வீதி, நீராவியடி,**
**யாழ்ப்பாணம்.**

## வயதும் வாழ்வும்


ஒரு வருஷம் முடிகிறது என்றால் ஒரு வயது முடிகிறது என்று பொருள்.

வயதுக்கு ஏறுகிற சக்தி உண்டே தவிர, இறங்குகிற சக்தி கிடையாது.


எத்தனை வயதுவரை ஒருவன் வாழ்ந்தான் என்பது கேள்வியல்ல; ஒவ்வொரு வயதிலும் அவன் என்ன செய்தான் என்பதே கேள்வி.

இன்ன ஆண்டில் இன்ன காரியம் நடந்தது என்று வரலாறு எழுதப்படுமானால் அந்த வரலாற்றில் எங்காவது ஒரு மூலையில் நம்முடைய பெயர் இருக்க வேண்டும்.


**– கவியரசு கண்ணதாசன் –**


## தைப்பொங்கல்



**எந்தமண் எங்களின் சொந்தமண் ஆயினும்**
**தந்தைதாய் முந்தையர் சமயமே போற்றுவோம்**
**இந்தநாள் இனியதைப் பொங்கல்நாள் பொங்குவோம்**
**செந்தணல் கதிரவன் செயலினைப் போற்றுவோம்.**



# இந்தோநேசியாவில் இந்துத் தமிழர்கள்

**– ஆத்மஜோதி நா. முத்தையா –**

இந்தோநேசியா என்னுஞ் சொல்லுக்கு இந்துக்கள் வாழும் தேசம் என்பது பொருள். உலகத்தில் இந்தியாவுக்கு அடுத்தபடியாக அதாவது இரண்டாவதாக இந்துக்கள் வாழும் பிரதேசம் இந்தோநேசியாவாகும். ஆகவே பெயருக்கேற்பப் பொருளும் அமைந்திருப்பதில் ஆச்சரியம் ஒன்று மில்லையல்லவா? சுமாத்திரா, யாவா, போர்ணியோ, பாலித்தீவு ஆகிய நான்கு பெருந்தீவுகளும் மூவாயிரத்துக்கு மேற்பட்ட சிறுதீவுக் கூட்டங்களும் சேர்ந்ததே இந்தோநேசிய இராச்சியமாகும்.

மூவாயிரந் தீவுகளிலும் மக்களே இல்லை. பாலித்தீவில் மாத்திரம் ஒன்றரைக்கோடி இந்துக்கள் வாழுகின்றார்கள். ஒரு காலத்தில் இந்தோநேசியா முழுவதிலும் இந்துக்களே வாழ்ந்ததாகச் சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன: படையெடுப்புக்களின் தாக்கத்தால் இன்று இந்தோநேசியஇராச்சியமமுஸ்லீமஇராச்சியமாக விளங்குகின்றது.

யாவாதீவின் தலைநகரம் ஜாகர்த்தா என்பது. ஜாகர்த்தாவில் ஒரு பெரிய நூதனசாலை இருக்கின்றது. நூதனசாலையில் இருக்கும் புதைபொருள் ஆராய்ச்சிப் பொருட்களில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமானவை இந்து சமயச் சின்னங்களே. நூதனசாலையில் நுழைவாயிலில் சுமார் ஆறு அடி உயரமான தொந்திக் கணபதி ஒருவர் வீற்றிருக்கின்றார். அவர் தான் நம்மையெல்லாம் வரவேற்கின்றார். இருபத்தெட்டுக்கும் அதிகமான கருங்கல்லினால் செதுக்கப்பட்ட விநாயகப் பெருமானின் திரு உருவங்களைநாம் இன்றுங் காணலாம்.சிவலிங்கங்கள், நடராஜரின் திரு உருவங்கள் போன்றவைகள். கலைக்குக் கலையாகவும், தெய்வீகத்திற்குத் தெய்வீகமாகவும் விளங்குகின்றன.

சுமாத்திராவின் தலைநகரமான மைடான் நகரில் மாத்திரம் இருபதினாயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் வசிக்கின்றனர். இந்தோ நேசியா முழுவதிலுமே இருபத்தையாயிரத்திற்குக் குறையாத தமிழர்கள் வசிக்கின்றனர்.

பாலித்தீவில் வசிக்கும் ஒன்றரைக்கோடி பேரும் இந்துக்களாகவே வாழுகின்றார்கள். இன்றும் புதை பொருளாராய்ச்சியினருடைய கையில் அகப்படும் பொருள் சிவலிங்கமாகவோ அன்றி இந்துத் தெய்வங்களின் திரு உருவங்களாகவோ தான் இருக்கும்.

**உலகிலே பல்வேறு சமயங்கள் இருக்கின்றன.**

**அவை ஒவ்வொன்றுக்கும் நூற்றுக்கணக்கான வணக்க ஸ்தலங்கள் இருக்கின்றன.**

**அவற்றைக் கட்டுவதற்கு, சமய அனுட்டானங்களை – கிரியைகளை மேற்கொள்வதற்கு கோடிக்கணக்கான பணம் செலவிடப்படுகின்றது.**

**இருந்தும் உலகிலே கொலை, கொள்ளை, இலஞ்சம், ஊழல், அடிதடி, போர் போன்றவற்றைத்தாம் நாளிலும் பொழுதிலும் நாம் கண்டும் கேட்டும் வருகின்றோம்.**

**இந்த அழிவுப் பாதையிலிருந்து மக்களை மீட்பதற்குச் சமயங்களாலோ சமயத் தலைவர்களாலோ முடியாமற் போய்விட்டதா?**

**'சமயங்கள் வகுத்துள்ள வாழ்க்கை நெறிகள் – ஒழுக்கக் கோவைகள் நல்லவைதாம் – ஆனால் விஞ்ஞானம் வேகமாக முன்னேறி வருகின்ற இந்த அவசர யுகத்தில், அவற்றைக் கைக்கொள்வது கடினம்;**

**முடியாது எனச் சொல்வோர் பலருளர்.**

**உலகத்தில் இந்தியாவுக்கு அடுத்த படியாக இந்துக்கள் அதிகமாக வாழும் தேசம், இந்தோநேசியாவகும்.**

**இத்தகையதொரு தேசத்தின் கலாசாரத்தைப் பற்றியோ அரசியலைப் பற்றியோ வரலாற்றைப் பற்றியோ ஆராய்ச்சி செய்யாமலிருந்தால் நமது தமிழுக்கும் சைவத்துக்கும் நாம் தீமை செய்தவர்களாகக் கருதப்படுவோம் என்ற முகவுரையுடன் தன் இரண்டு வருட கால இந்தோநேசிய அனுபவத்தைப் பற்றிய நூலொன்றை அமரர் 'ஆத்மஜோதி' நா. முத்தையா, இற்றைக்கு 22 ஆண்டுகளின் முன்னர் எழுதியிருந்தார்.**

**பெயரளவில் மட்டுமல்லாமல் நடைமுறையிலும் இந்துக்களாகவே வாழ்கின்ற அந்த நாட்டு மக்கள் சம்பந்தமான உண்மைத் தகவல்களை உங்களின் பார்வைக்கும் பதிவுக்கும் தருகின்றோம்.**

ஒரு காலத்தில் உலகம் முழுவதிலுமே இந்து சமயத்தவர்கள் தான் இருந்ததுபோன்றே இந்தோநேசியா முழுவதிலுமே இந்துக்கள் மாத்திரமே வாழ்ந்து வந்த காலம் ஒன்றிருந்தது. பாலித்தீவில் வசிக்கும் அத்தனை பேரும் இந்துக்களாக இருப்பது போன்றே இந்தோநேசியாவில் வசித்த அத்தனைபேரும் ஒரு காலத்தில் இந்துக்களாவே இருந்திருக்கிறார்கள்.

இந்து, இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்தவம் ஆகிய நான்கு மதங்களும் இந்தோநேசிய அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மதங்களாகும். இந்தோநேசிய அரசியல் பஞ்சசீலக் கொள்கையின் அடிப்படையில் அமைந்தபடியினால் நான்கு சமயங்களுக்கும் ஒரேவித சலுகையும் பாதுகாப்பும் உண்டு. எந்தச் சமயத்தவராயினும் அவர் அச்சமய ஒழுங்கு கட்டுப்பாடுகளுக்கமைந்து வாழவேண்டும். எந்தச் சமயத்தையும் சாராது தனக்குச் சமயம் இல்லை என்று ஒருவர் சொல்வாரானால் அவர் காலவரையறையின்றி அரசாங்க விருந்தினராக இருக்க நேரிடும். மிகக் கடுமையான சிறைத் தண்டனை அநுபவிக்க நேரிடும். முதலிடம் மதத்திற்கே தரப்படுகிறது. அடுத்தபடியாகத்தான் அரசியல் முக்கியத்துவம் பெறுகினறது.

ஒருவன் மதக் கொள்கைகளை அநுசரித்து அதன்படி நடப்பானானால் அவன் நல்ல பிரஜையாக வாழமுடியும் என்பது அரசினுடைய நம்பிக்கை. மதத்தின் மூலமாகத் தான் நல்ல பிரஜைகளை உருவாக்க முடியும். இன்றைய மக்களுடைய வாழ்க்கை மனம்போன போக்கெல்லாம் போகிறதாக அமைந்து விட்டதைப் பார்க்கிறோம்.

மதாசாரங்களை அநுட்டித்தல் மூலம்தான் மனிதன் மனிதனாக வாழமுடியும் என்பது அரசாங்கத்தின் அசைக்க முடியாத நம்பிக்கை. மதங்கள் எல்லாம் பஞ்சசீலக் கொள்கையின் அடிப்படையிலேயே இயங்க வேண்டும். பஞ்சசீலக் கொள்கையின்படி இயங்காத சமயம் அங்கு இருக்க முடியாது.

முன்னொரு காலத்தில் இந்துக்கள் மயமாக இருந்த பிரதேசத்தில் இன்று இந்துக்கள் சிறுபான்மையினராக இருக்கின்றார்கள். மொழிவழியாகப் பார்த்தாலும் தமிழர்கள் சிறுபான்மையினராகவே காணப்படுகின்றனர். மற்றைய சமயங்கள் தோன்றுவதற்கு முன்பு உலகம் முழுவதும் இந்து சமயம் பரவியிருந்தது என்பதற்குப் பல சான்றுகள் இன்றும் காணப்படுகின்றன. ஒரு காலத்தில் கிழக்கிந்திய தீவுகள் என்று அழைக்கப்பட்ட தீவுக்கூட்டங்களே இன்றைய இந்தோநேசியாவாகும். (தொடரும்)

# A GREAT PHILOSOPHY IN THE CLASSICAL TAMIL

*The writer, a Professor Emeritus - University of Jaffna, affirms that Saiva Siddhantha the unique philosophy of the Tamil Hindus, has its roots in our classical Tamil Literature.*

Tamil is a Classical Language. Most of the Tamil scholars believe that the Tamil Classical Period runs only up to the 6 th century A.D. But I am unable to think of a Classical period in Tamil that does not include Kampan, Cekkilar and Kacciyappar. The Sangam poems, the devotional hymns of the Saivaits and the Vaishnavaits and the great poets of the Chola period have contributed to the origin and development of a great philosophy, namely, Saiva Siddhanta in Tamil. George Hart III (University of California, Berkley) has written extensively on the influence of a Southern tradition on the Sanskrit poetic tradition.

But at the same time he believes that the great sacred works of Tamil Hinduism, beginning with Sangam Anthologies, have undergirded the development of modern Hinduism.

Their ideas, he observes, were incorporated in the Bhagavata Purana and other texts (in Telugu, Kannada as well as Sanskrit), whence they spread all over India and also Tamil has its own works that are considered to be as sacred as the Vedas and that are recited alongside Vedic mantras in the great Temples of South India.

Though most of the Saiva Siddhanta texts were written after the Chola period, the actual thoughts of this great philosophy were nurtured long before that. It was the devotional literary tradition of the Tamils that has created Saint Meykandar' s Saiva Siddhanta doctrine.

**Dr.G.U. Pope has described Saivasiddhanta as the choicest product of the Dravidian intellect.** After Meykandar' s Siva - jnana - bodham, the next work of importance on the doctrine is the Siva - Jnana - sittiyar of Arunandi. Prof. K.A. Nilakanta Sastri describes it as a classic treatise on Tamil Saivaism.

Greek is an ancient Classical language. It had a number of reputed philosophers. Parmenides of Elea who lived around the earlier part of the 5th century B.C. was a philosopher and a born poet who recorded his thoughts in poems. According to him all that we see and experience through our five senses are not true; they are illusions. The only true entity is the soul that is boundless, invisible. The Tamil Saiva Siddhanta philosophers too have recognized soul (Pacu) as an important entity in their concept of Trinity *(முப்பொருளுண்மை)* as follows:

Pati - Lord of the Soul; the Supreme Being
Pacu - the Soul that is fettered by Pacam
Pacam - Bondage that fetters the soul.

Pacu is a philosophical term used in Saivasiddhanta for the life principle in living beings

The Classical Tamil Language has provided appropriate technical terms for this great doctrine. Some of them are Tamilized forms of the Sanskrit terms, yet we have many terms coined from the early Tamil literary texts.

It is befitting that a Classical language like Tamil is bestowed with a philosophical system that bears a distinctive mark of Tamil genius.

**Prof. A. Sanmugadas, Ph.D. (Edinburgh)**

# சமயம் ஒரு வாழ்வியல்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

மனித வாழ்க்கையை நெறிப்படுத்த வல்லது சமயம். ஏனெனில் அது ஒரு வாழ்வியலாக முன்னோரால் வகுக்கப்பட்டுள்ளது. ஒருவருடைய நாளாந்த வாழ்வியலினை ஒழுங்குபட அமைத்து அதைப் பேணும் முறைமையைச் சமயம் வரையறை செய்துள்ளது. இயற்கையின் செல்நெறியைக் கண்காணித்து அதன் ஆற்றலை உணர்ந்து வாழ்வு நடத்துவதே சமய வாழ்வாக முன்னர் கடைப்பிடிக்கப்பட்டது. இறைவழிபாடு என்ற கருத்தின் தோற்றத்திற்கு இயற்கையை வழிபடும் நடைமுறை முன்னோடியாக அமைந்துள்ளது. நிலம், தீ, காற்று, நீர், வான் என்ற ஐவகை ஆற்றல்களையும் ஓர் உருவமாக இணைத்து வழிபடும் மரபு தோன்றியபோது இறைவன் என்ற உருவவழிபாடு சமயத்தில் இணைந்தது.

இயற்கையிலே காண்பவருக்கு ஒரு சமய உணர்வை ஊட்டுகிறார் அம்மையார். ஒரு நாளின் கூறுகளைப் பொழுதாக எண்ணி வீணே கழிக்காமல் அவற்றை வழிபட்டு, வாழும் மரபு ஒன்றை அவர் முதலிலே தொடக்கியுள்ளார். நாளின் தொடக்கத்தையும் முடிவையும் மனித நிலையிலே நின்று சிந்தித்துத் தமது கடமைகளை ஆற்றும் மக்களை அம்மையார் ஒரு புதிய வழிபட்டு நிலைக்கு ஆற்றுப்படுத்தியுள்ளார்.

விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சியால் காலமாற்றம் பற்றிய கருத்துக்கள் இன்று வளர்ச்சியடைந்துள்ளன. மாற்றத்தை முன்னரே கணித்துக்கூறும் பொறிமுறைகளும் வளர்ச்சி பெற்றுள்ளன. ஆனால் இயற்கையின்

**இயற்கையின் போக்கை, ஆற்றலை உணர்ந்து அதற்கு ஏற்ப தம் வாழ்க்கையை நடத்துவதைத் தம் சமய வாழ்க்கையாக முன்னோர் கொண்டனர் எனச் சுருங்கச் சொல்லிச் சிந்திக்கவைக்கிறார் யாழ் பல்கலைக்கழக வருகை விரிவுரையாளர் - சமய, இலக்கியச் சொற்பொழிவாளர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

நாயன்மார்களுடைய தேவாரப்பதிகங்களில் இக்கருத்துத் தெளிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இயற்கை அழகினை எடுத்துப் பாடியவர்களில் காரைக்கால் அம்மையார் முதன்முதலாக இறை உருவைச் செந்தமிழால் சித்திரமாகக் காட்டினார்.


**'காலையே போன்றிலங்கும் மேனி கடும்பகலின்**
**வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு - மாலையின்**
**தாங்குருவே போலுஞ் சடைக் கற்றை மற்றவற்கு**
**வீங்கிருளே போலும் மிடறு '** (அற்புதத் திருவந்தாதி: 15)

ஒரு நாளில், காலத்தின் மாற்றத்தை உற்று நோக்கிய காரைக்காலம்மையின் உள்ளக் கருத்தில் இறை உருவின் அழகுத்தோற்றம் தோன்றியது. காலை பகல். மாலை, இரவு எனப் பொழுதுகளின் மாற்றத்தை

ஆற்றலோ மனித ஆற்றலை வென்று தனது இருப்பைப் பலமுறைகளில் வெளிப்படுத்தி வருகின்றது. எனவே இக்கால கட்டத்தில் மனித வாழ்வியலுக்கும் இயற்கைக்குமிடையே ஒரு தொடர்பு நிலையாக முன்னோர் வழிபாட்டு நடைமுறைகளை வகுத்துச் சென்றனர்.

காலை முதல் இரவு வரை இயங்கும் மனிதன் பொழுதின் மாற்றத்தை மனதில் கொண்டு வாழும் பயிற்சியை இந்த நடைமுறைகள் மூலம் பெற வழிகாட்டினார். அதுவே சமயம் எனப் பலகாலமாக மக்கள் வாழ்வியலில் இணைந்திருந்தது. இயற்கையை கண்ணாரக் கண்டு, கையாரக் கூப்பி நெஞ்சார எண்ணி வாழும் வாழ்க்கையை எமக்குத் தந்தது.

# சித்தாந்தச் சைவச்சுடர் நிலையம்



யாழ்ப்பாணம் - நல்லூர் கந்தப்பிள்ளை ஆறுமுகம்பிள்ளை அவர்களுக்கு 1849 ஆம் ஆண்டில் 'நாவலர்' என்ற சிறப்புப் பட்டத்தை வழங்கி அவர்களை 'ஆறுமுகநாவலர்' ஆக்கிய தென் இந்தியா - திருவாவடுதுறை ஆதீனம், கடந்த ஒரு நூற்றாண்டுக்கும் மேலாகப் பன்முகப்பட்ட சைவசமயப் பணிகளைச் செய்துவரும் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைக்கு 'சித்தாந்தச் சைவச்சுடர் நிலையம்' என்ற கௌரவ விருதை வழங்கியுள்ளது. யாழ் சைவபரிபாலன சபையின் சார்பில் அதன் தலைவர் சிவநெறிப் புரவலர் த. சண்முகலிங்கம் ஆதீனத்தின் குரு முதல்வரிடமிருந்து விருதினையும், பணமுடிச்சையும் பெற்றுக் கொண்டார்.

Edited & Published By Mr. S. Shivasaravanabavan on behalf of the Saiva Paripalana Sabai 450, K.K.S Road, Jaffna & Printed at Bharathi Pathippakam, 430, K.K.S Road , Jaffna 14.01.2009 (1st Day of Thai Thinkal). Phone: 021 222 7678